B
28 NOV 1930

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஃது

முஸ்லிம்பிறவிகள் இருலோகத்திலும்

நற்பாக்கியங்களைப்பற்ற அநேக நல்மாராயங்களைக் கூறும்

தவ்லதே தாரைன்

(என்னும்)

இருலோக சம்பத்து.

:0:

992
297

முதற் பாகம்

நல்அமல் விளக்கம், நயவழி துலக்கம்.

இதனை

வாலாஜா தாலுக்கா மேல்விஷாரம்

கடைக்கார அப்துல்கனீ சாஹிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்றுஹீம்சாஹிபவர்களால்

கோர்வைச் செய்து

கல்விக் கடலாகிய அனந்தம் உலமாக்களால் பரிசோதித்து

பெங்களூர்தண்டு கமர்ஷியல்ரோட்டு இரும்புமண்டி

(கீழ்விஷாரம்)

ஆலீஜனாப் வி. பாபுசாஹிபவர்கள்

முயற்சையால்

சென்னை

P. ஷண்முகம் அண்டு கம்பெனியாரால் அச்சிடப்பட்டது.

முதற் பதிப்பு.



ஹிஜுரத்து 1348ம்
ஞூப துல் ஹஜ்ஜு மீ

ரிஜிஸ்தர்
காபிரைட்.

ஸ்டிப்பயிண்டு 1-க்கு
விலை அணா 6.

போஸ்டு மாரலாக
வி. பி. யில் அணா 9.

ரிஜிஸ்த்தர் அறிவிப்பு.

இந்த தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து என்னும் பெயருள்ள புத்தகத்தை, கனம்பொருந்திய கௌர்ன்மெண்டு புக்ரிஜிஸ்தரார் சட்டப்படிக்கு சென்னையிலும், புதுவையிலும், ரிஜிஸ்த்தர் செய்திருக்கின்றமையால் இதனைக் கோர்வைசெய்து, அச்சிற் பதிப்பிட்டு வெளியிட்டவரான மேல்விஷாரம் கடைக்கார அப்துல் கனீ சாகிபவர்கள் குமாரர் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாஹிபவர்கள் அநுமதியின்றி இப்பெயர் பொதிந்த புத்தகத்தையாகிலும், இதில் பொதிந்துள்ள பாடல்களையாகிலும், அச்சிடப்படாது. அவ்வாறு அச்சிட்டால் அச்சிட்டவர்களும், அதைப் பதிப்பித்துக் கொடுக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும், கௌர்ன்மெண்டு புக் ரிஜிஸ்த்தரார் சட்டப்படிக்கி ஷையார் கோறும் நஷ்டங்களுக்கும், செஷன், குற்றத்திற்கும், உட்படுவார்களென்பதை யாவரும் அறிவீர்களாக.

இங்ஙனம்

(அஹ்ஸன்) க முஹம்மது இப்ருஹீம்.

மேல்விஷாரம்.

கவனிப்பு :—இந்தப் புத்தகத்தின் 36-வது பக்கத்தில் 4-வது 22-வது வரிகளில், ஸவ்ஜீ என்பதை ஜவ்ஜீ என்று திருத்திக் கொண்டு படிப்பீர்களாக.

அறிவிப்பு.

இந்த தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து ஐந்து பாகம், கோர்வையாயுள்ளதில் றஹ்மானுதவியால் மூன்றுபாகம் வெளிவந்தது. இன்ஷா அல்லாஹு மற்ற இரண்டு பாகங்களும் கூடிய சீக்கிரம் வெளிவருமென்பதை அறிவீர்களாக.

இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ள ஹதியாக்களைப் பார்வையிட்டு, விருப்பமுள்ளவர்கள் நேரில் அல்லது எழுத விலாசம்,

அஹ்ஸன் புக் டிபோ,

மேல்விஷாரம் போஸ்டு, நார்த்தாக்காடு.

C

தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து முதற் பாகத்தின் அட்டவணை.

பக்கம்.	விஷயம்.	பாடற்றொகை.
1	காப்பு விருத்தம்..	1
	ஹம்து வநஅத்து..	11
3	அவையடக்கம்..	4
4	நூலாசரியன் வேண்டுகோள்........................	1
	நப்சுக்குபதேசம்..	14
7	நப்சேஹவாவெனும் பேராசையின் கெடுதிகள். இதில் நப்சுக்கு முக்கியமான, உபதேசங்கள் பலதுடன் நப்சேஹவாலால் அல்லா(ஹ்) வைமறந்த கொடியோர்கள் மாண்டதும், அல்லாவுக்கு உகந்த அடியார்கள் ஆகிரத்துக்கு சென்றுபோன செய்திகளும், சுறுக்கமாகப் பேசியுள்ளன.	53
13	நலம்பொல முணராக் காலமனுவுகள்.......... இதில் சவுதவின்ஸித்தி அதாவது, பதிநான்காம் நூற்றூண்டில் பிறப்பவர்கள் செய்திகளும் அனந்த நலனுபதேசங்களும் பேசியுள்ளன.	60
21	இத்தாபின் துவர்க்கம்..	11
22	பிஸ்மில்லா(ஹ்) வின் மகிமை........................	30
	பிஸ்மில்லா(ஹ்)வின் சங்கை.	12
27	அல்ஹம்து சூறவின் பஸீலத்து..............	
30	தொழுகையில் அல்ஹம்து சூறத்தோதும் பஸீலத்து..	100
39	தன்பீஃ.. இதில் அனந்தம் உபதேசங்களுடன், இபுலீசு லஅனத்தின் துயாங்களும், தொழுகாளர்க்கு நல்மாராயங்களும், தொழுகை விடுவோர்களுக்காகும் இருலோக நஷ்டங்களுங் கூறப்பட்டுள்ளன.	50
	முதற்பாகம் அட்டவணை முற்றிற்று.	

இதில் 45, 46, 47வது பக்கங்களிற்கண்ட அரபி வாசகங்களாவன:

(1) حديث - إنه إذا قام الرجل إلى الصلوة فقال الله أكبر خرج من ذنوبه كيوم ولدته أمه

(2) وإذا قال سبحانك اللهم وبحمدك كتب الله تعالى له بكل شعرة على بدنه عبادة سبعين سنة

(3) وإذا قرأ فاتحة الكتاب فكأنما حج واعتمر

(4) وإذا ركع فكأنما تصدق بوزنه ذهبا

(5) وإذا قال سبحان ربي العظيم فكأنما قرأ كل كتاب أنزل من السماء

(6) وإذا قال سمع الله لمن حمده نظر الله تعالى إليه برحمته

(7) وإذا سجد فكأنما أعتق بعدد كل سورة من القرآن رقبة

(8) وإذا قال سبحان ربي الأعلى كتب الله تعالى له بعدد كل سورة حسنات .....

(9) وإذا تشهد أعطاه الله تعالى ثواب الصابرين

(10) وإذا سلم من صلوته فتح الله تعالى له ثمانية أبواب الجنة فيدخل من أي باب شاء

(11) وقال النبي صلعم إن الله فرض الصلوة الخمس على كل مسلم ومسلمة وعلى كل حر وعبد

(12) وقال النبي صلعم - من ترك الصلوة الفجر تبرء منه الإيمان

(13) ومن ترك الصلوة الظهر تبرء منه الأنبياء

(14) ومن ترك الصلوة العصر تبرء منه الملئكة المقربون

(15) ومن ترك الصلوة المغرب تبرء منه القرآن

(16) ومن ترك الصلوة العشاء تبرء منه الرحمن

لـ 12 مُتَلْ - 16 - قُرِيلْ كَنْبَدُرُكُمْ - مَنْ تَرَكَ الصَّلٰوةَ بِنْفِيْ - كَافُكُمْ - ص - ثُكُمْ تَنْدْ كُدْكَامُلْ
مَنْ تَرَكَ صَلٰوةَ بِيْرُفِيْدَ فِتْنَانَالْ : فَجْرِ - ظُهْرِ - عَصْرِ - مَغْرِبِ - عِشَاءِ يُرُفِيْدِ كُوِيْنْدُمْ.

1 17665

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஃது

தவ்லதே தாரைன்

(என்னும்)

இருலோக சம்பத்து.

விருத்தம்.

இருலோக சம்பத்தாமேற்ற முதற்பாகமிதில்
அருமையுள சாலிஹ் அமல் அன்பாக தீனவர்கள்
சருகாமல் செய்துபலன் சங்கையுடன் பற்றிடவே
மருங்காக சொல்வதற்கு மன்னவனே நீ காப்பு. (1)

ஹம்து வநஅத்து.

தோங்கல்.

எல்லாங் குன்னெனும் சொல்லிலாக்கி எங்கும் மறைவுடன் பகிரங்கமாய், அல்லா(ஹ்) ஒருவனென் றேவிளங்கும் அஹதுன் சமதுமாய் காலிகுமாய், நல்லா ரமரர்கள் மனுஜின்னுகள் நலத்தவான்புவி படைக் கோலங்கள், எல்லாம் படைத்தோனே உந்தன்புகழ் எவ்வாறென்னுவால் புகழ்ந்திடுவேன். (2)

அண்டமேழையும் புவிஏழையும் அதற்குள் ளமைந்துள்ள பலவஸ்த்தையும், கண்ணில்லா கண்டுங் காதில்லாமல் கருதி கேள்க்கவும் குதரத்தினால், தண்ணீர் துளியினால் மனுவையாக்கி தகுமாயவை யுமே பாதுகாப்பில், எண்ணிப் புகழ்ந்திட முடிந்திடாவே என் றென்றும் போற்றிப் புகழுவேனே. (3

வான்புவி யெல்லா மனுவுக்காக வளரும் கதிர்மதி மனுவுக்காகத் தோன்றும் படைப்பெல்லா மனுவுக்காகத் தோயுமழை காற்று மனுவுக்காக, மேன்மை படைப்பெல்லா மனுவுக்காக மிருகம் மாடாடு மனுவுக்காக, உளன்றலா யமைத் தாளுகின்ற உண்மை மாலிக் ஒருவனீயே. (4)

எங்களிறையோனே யாறஹீமே ஏற்ற உன்னன்றி எதை நினைப்போம், சங்கம் சங்கமாய் நிஅமத்தீந்து சருகா ¡காத்துபின் மருமையிலே, அங்கமுள உந்தன் அடியாருக்கு அழகாம் சுவனங்கள் தோட்டங்களும், மங்காதொளிஹூறு கில்மான்களை மணமாயமைத்த றப்பு பொருவ னீயே. (5)

உந்தன் கிருடையா லுடைவனே உயர்வான் புவிமற்றும் படைப்பமைத்து, பந்தமுடனெல்லா நிஅமத்துகள் பாங்கா எமக்காக அமைத்து வைத்து, அந்தமுடன் பல படைப்புகளை யமைத்து எங்களின் வசமதாக, தந்து எக்காலு மெங்களுக்கு தகுமா யுதவிசெய் யாதிநீயே. (6)

மூன்று மைல் கொண்ட காதத்திலே மூன்றெட்டாயிர விரிவு பூமி ஆன்றப் பனிரண்டில் கருப்பர்களும் ஆகுமெட்டினில் வெள்ளையரும் தோன்று மூன்றிலே பார்ஸீகளுந் துய்தாமொன்றிலே அரபிகளாய் உளன்றலாயமைத் திரணமீயும் உண்மை றூஜிக் ஒருவனீயே. (7)

அதிபனே யுந்தன் படைப்புகளில் ஆகும்அறுஷது பெரும்படைப்பு பதினெண்ணுயிர மதற்குபுறாஜ பண்பா யொவ்வொன்றுக் கிடையில் தூண்கள், நிதியாகபதி னெண்ணுயிரம் நேர்மை யதிலொவ்வொன்றுக்கிடையில், பதினெண்ணுயிரங் கங்கோறுக்கள் பாங்கா யுண்டொவ்வொன் றுக்கிடையில். (8)

அந்தமுடன்பதி னெண்ணுயிரம் அதுபோல் கிந்தீல்க ளதற்கிடையில், இந்த ஈரேழ் லோகம்வைக்க இதமாயதுவுமே ஒருராகியை பந்தமுடன் பார்க்க காணும்போல படைத்தாள் பாத்திபா உனைப் புகழ எந்த நாவுக்கு சக்தியுண்டு மில்லைஇல்லையே யாஇலாஹீ. (9)

ந அத் து.

எல்லாப் படைப்புக்கு மவ்வலீனுய் ஏற்ற நபிமாரில் ஆகிரீனுய் அல்லாவின் திருமஹ்பூபுமாய் ஆலத்தார்க்கெல்லாம் றஹ்மத்துமாய் நல்லாயுதித்து தீன் துலக்கி வைத்த நபிமேல் சலவாத்தும் சலாமு ரைத்தே, எல்லாமவர்கிளை சஹாபிகள்மேல் இறையோன் ருஸியுண் டாகஆமீன். (1)

அல்லா(ஹ்) றசூலுட ஏவல்களை அன்பாய் தெளிவாக விளக்கி வைத்த, நல்லார் தாபஈன்* இருவகையார் நலத்த புக்ஹாக்கள் தங்க ளுடன், எல்லா நலம்பொல மின்னதென்று மேற்றமாய் கூறும் உல மாக்களாம், நல்லாரிவர்கள்மே லெல்லாநாளும் நாயன் றஹ்மத்து சொரிய ஆமீன். (2)

அவை யடக்கம்.

தோங்கல்.

மன்னர் நபியுல்லா உம்மத்திலே மருங்காயுதித்த வாண்பெண்கள் சிலர், வின்னமாம்புவி வாழ்க்கைநம்பி வீணில் கழிப்போர்கள் இரு பதியில், நன்னயம் பெற அமல்கள் செய்ய நன்மாராயங்கள் பல தும் சேர்த்து, அன்பா மறிவிப்பில் கூறும்பாக மைந்து மிறையவன் பொருத்தம் நாடி. (1)

மருமை இம்மையில் பல சம்பத்து மருங்கா முஸ்லிமாண் பெண்கள் பெற, அருமை மேல்விஷா ரம்கடைக்கார் அப்துல்கனீமகன் அஹ்ஸ னென்போன், பெருமை யுளதீனி னேவல்கூறும் பிகுஹு அகாய தில் பலதை யாய்ந்து, சிருமையுடன் சேர்த்து செந்தமிழில், ஜெக மிசை இந்நூல் வெளியாகவே. (2)

கண்டோன் மெண்டிலே கமர்ஷியல் ரோட் கனத்த வியாபாரி பெங்க ளூரில், பண்போடு வாழும் கிழ்விஷார்வி. பாபு சாகிபு என்னும் நல் லோர், நண்பாய் செய்நிதி முயற்சையினுல் நலத்தநூல் வெளியான தாய்ந்து, இன்போ டமல் செய்வார் பலனில் நாயன் இவர்கட்கு மீவா ருகஆமீன். (3)

*தாபஈன் என்பது, தபஅத் தாபஈன்கள்.

பதின்மூன்று நூற்றின் மேல்ஹிஜ்ரத் பகரும் நார்ப்பத்தி எட்டா மாண்டின், மதின நபியுல்லா பிறந்தமாதம் மருங்குள்ள றபீ வுல் அவ்வலில், பதினெந்தாந் தேதி வெள்ளியன்று பண்பாய் கோர்வை யாய் முடிந்தச்சிட்டு, நிதிகோர் நாயகன் கிருபையினுல் நிலமிசை யிந் நூல் வெளியானதே. (4)

நூலாசிரியனின் வேண்டுகோள்.

———o———

இந்தஇருலோக சம்பத்நூலில் இன்சின்மாதியால் தவருதல்கள் அந்தமுடன்கண்ட அறிவாளர்கள் அதைமன்னிப்பெனும் போர்வை யினுல், பந்தமுடன்மரைத் திகுலாசுடன் பண்பாய் திருத்தியே படிப் பவர்க்கு, சுந்தமுடனிரு லோகத்திலும் சங்கை றஹ்மத்து சொரி இலாஹீ. (1)

நப்சுக் குபதேசம்.

தோங்கல்.

மனதார்ந் தோசித்து அஹ்ஸலீன நீ மதித்து உந்தனை நோட்டஞ் செய்வாய், உனது கோலமுன் னிருந்ததென்ன உண்மை யானஉன் ஹாலத்தென்ன, மனியா மொருதுளி விந்துதானே மனுடன் குளி விதி நஜிஸுதானே, பனியாதம்மாக உலகிலுன்னைப் படைத்தோனை மறந் தலைவதேனே. (1)

கடல்போற்றிரளான வாழ்வாகிலுங் கினவுபோலொத்த வாழ்க்கை நம்பி, நடனமாம்ஹவா நப்சாசையால் நாளுமல்பகல் பாடுபட்டு உடலாங் கும்பிக்கி உணவுதேடி உண்டுவுறங்கின தல்லாலெந்த அடவாமாகிரத் அமலைசெய்தாய் ஆய்ந்துபார்நாளை ஜெயமடைவாய்.

(தலீல்)

யா அய்யுஹல் இன்ஸானு மாகற்ரக பிறப்பிகல் கரீமில்லஜீ
கலககக பஸவ்வாக பஅதலக.

மருங்காம் மன்னுனைக் கொண்டுமேலாய் மனுடனே உன்னை எந்த வஸ்து, மருட்டிவிட்டது என்றும்பின்னே மானிடனாக படைத்து மவன், உருவம்யாவுமே செவ்வையாக்கி உற்றநேர்மையாய் சீர்த் திருத்தி, அருமையாகவே யமைத்தானென்றே அருளினானிதை புறுகானிலே. (3)

உற்றுநோட்டஞ்செய் யடியனே நீ உயிரு மறிவுனக் கீந்ததாரு கற்றுங் கழுதைநாய் பன்றி யாக்கா காணுமனுவிலே யமைத்ததாரு முற்று முறுப்பெல்லா மமைத்து நன்றாய் முறைபோல் சுகத்தோடே வைத்ததாரு, பற்றும் பலவித நிஅமத்தீந்துப் பாதுகாத்துன்னை வளர்ப்பதாரு. (4)

கண்ணிலொளி யுனக் கீந்ததாரு காதுங் கைகளைத் தந்ததாரு மண்ணிலுளமட்டும் மகிழ்ந்திருக்க மனைவி மக்களைக் கொடுத்த தாரு, எண்ணிலடங்காத நிஅமத்துகள் யாம்கேட்குமுன்னே கொடுத்ததாரு, நண்ணி இதுவெல்லாங் கொடுத்தாள்கின்ற நாயன்றனை மறந் திருப்பதேதனோ. (5)

காறூன்போல் சீமானானாலென்ன கனத்தபொக்கிஷ மிகுத்தாலென்ன பேருங் கீர்த்தியாய் வாழ்ந்தாலென்ன பெரிய மஹல் கட்டி வசித்தாலென்ன, ஹூரைப் போல் பெண்டிர் வாய்த்தாலென்ன உயர்வா மழகின்சேய் உதித்தாலென்ன, நூராங் சண்ரண்டும் பெட்டையானால் நோக்கி சந்தோஷ மடைவதேது. (6)

உலகின் நிஅமத்து யாவற்றுமே உன்றன் கைவச மாகிட்டாலும் பலபல கனிவர்க்க தோட்டம் பட்டா செய்து நீ பலன்பெற்றாலும் நலத்த ருசிகாணும் நாவில் ருசி நாயனெடுத்திட்டால் லாபமேது யெலமாய் ருசிகாண அமைத்தறப்பை பேதைகுணத்தாலே மறப்பதேனோ. (7)

மருங்காம் மனுவிலே பிறந்தவனே மன்னுேன் அல்லாவை மறந்த வனே, சருகாதிஞேர்கள் செய்வதென்ன சற்றுங் கினவிலும் பாரா யோ நீ, கருமி யுன்வயர் நிறப்புவதை கனத்த தௌலத்தா எண் ணிக்கொண்டாய், அருமை மனுவில் நீ பிறந்துமென்ன ஐவாய்மிரு கம்போல் நீயுமாஞய். (8)

மிருகம் மாடாடுக் கில்லாததோர் மீக்ஷிபெற்றதோர் அறிவானது குறையாக் கிடைத்தது உனக்கேதாச்சு குறங்குங் குல்லாவால் வடி வாகுமோ, பறந்துப்பறந்து நீ சம்பாதித்துன் பயணத் துணைக்கெந்த வேலை செய்தாய், உரமாயோசித்து அமல்கள்செய்தா லுனக்கது நாளை துணையாகுமே. (9)

ஒரு காதவழி போவதாஞ லுற்றவாகனங் கையாயுதம், சருகாதுடை பணங் கட்டுசாதம் சார்ந்த துணைக்காக தோழனென்றும், பெருமை பவருமாய் கூட்டிபோராய் பிந்திமீண்டிடா பெரும் சபர்க்கு, அருமை யுன் துணைக் கெதை தேடிஞய் ஆதம்மகனேநீ உற்றுபாரு. (10)

ஆற்றின் கானலைப் புனலென்றெண்ணி யதையள்ளி எவர் தாகந் தீர்ந் தார், சாற்றும் பொன்பொருள் சம்பத்திஞல் சாகாஜகத்தினி விருந் தவர் யார், போற்று மவுத்துவந் தடுத்தபோது புதையலுடன் கபுர் புகுந்தவர்யார், மாற்ற முடியாத மவுத்தடுக்க மாலெல்லாம் விட்டு மண்புகுந்தார். (11)

முன்ஞலவர்போன வழியைதேடி முறையாய் நாம் போக ஒரு நாளது, பின்ஞல் வருவதை கவனியாமல் பெண்டீர் பொன் பொருள் பேராசையால், தன்னைப் படைத்தோனை மறந்தலைந்து தரணி தனில் காலம்போக்கும் நப்சு, நன்னையமிரு பதியில்பெற நவில கவனமாய் கேட்பீர்களே. (12)

(தலீல்)

அபஹஸிப்தும் அன்னமா கலக்ஞதும். ஆயத்து (கடேசிவரையில்)

வல்லோனுனைவீணு விளையாட்டுக்காய் வகுத்தா னென்றெண்ணிக் கொண்டாயோ நீ, பொல்லான் நீஅல்லா திருமுன்னமே போகே னென்றெண்ணி கொண்டாயோ நீ, எல்லா முயிர்களை யழித்தெழுப்பி இறையோன் கேட்டிடுமஹ்ஷர் நாளில், வல்லான் முன்னெவ்வார் நிற் பாயென்று வகையாய்ந் தமல்தேடி செய்குவாயே. (13)

உலகிலொருசபை போவதானல் ஒழுங்காய் கண்ணுடி பார்த்துபார்த் துப், பலபலவித உடுப்பணிந்துப் பாங்கா யுன்முக மினுக்கிக் கொண்டு, நலமாய் போகின்ற அடியனேநீ நாளை மஹ்ஷரில் நாயன் முன்னே, துலக்கமாய் போக உன்முகத்தை துய்தாய் காட்டும் நல் துணையை தேடு.

(ஹதீஸ்)

இன்னல்லாஹ லாயன்துரு இலா ஸுவரிகும் வ அம்வாலிகும் வலாகின் யன்துரு இலாகுலூபிகும் வ அஅமாலிகும் வ நிய்யாதிகும்.

திட்டமாயுங்கள் சூரத்தையும் தேடுமுங்களின் பொருளதையும்
சட்டமாய் வல்லான் பார்க்கமாட்டான் சருகாதவன் காணல்யாதெனி லோ, மட்டிலடங்காதும் கல்பதையும் மருங்கா மமலேயும் நிய்யத்தை யும், பட்சமாகவே பார்ப்பானென்றே படைத்தோன் நபியுல்லா பகர்ந்தார்களே. (15)

நேரார்நாயனை சந்திக்கவும் நேர்மை பதிசொர்க்கம் புகுந்திடவும்
மாராய் தடுப்பது மானிடரை மாப்பெரும் ஹவா நப்சதாகும்
வீராயதை யாய்ந்து நடப்பவர்கள் வெற்றியாகிர்நாள் பெருவதுண் மை, சீராயதை யாய்ந்து யறிந்திடார்க்கு சீர்கேடாம்நப்ஸின் கேட்டு ரைப்பாம். (16)

நப்ஸே ஹவாவென்னும் பேராசையின் கெடுதிகள்.

தோங்கல்.

நப்ஸேஹவாவெனும் பேராசையை நழுகவிட்டவ னிரண்டு லோ கில், செப்பும்முசீபத்துப் பலதும்விட்டு ஜெயம்பெற்ற நல்லோ ருட னிருப்பான், மெப்பாம் பேராசை வைத்தோனவன் மிக்கமுசீபத்தி லாழ்ந்தவனுய், தப்பாம் பாவியாய் தலைமேலடித் தயங்கிபோகு வான் பயணவேளை. (1)

ஹூ ஹூ வெனுமொரு வலம்புரிக்குள்—என்ற இராகம்.

இன்சானுடலி லிருக்கும நப்சு நான்கு விதமாய்
ஆன்பாயதனை யடியிற்சொல்ல யறிந்துணர்வாய் நீ. (2)

நப்ஸே அம்மா றுலவ்வாமா இன்னும் முல்ஹிமா
நப்ஸேமுத்ம இன்னு இந்நால் குணமறிவாய் நீ. (3)

எப்போதுங் கெடுதி யில்லலைழத்து இச்சையைப் பூட்டும்
தப்பாதிதுதா னப்ஸே அம்மா றுதவிழ்வாய்நீ. (4)

கெட்ட கருமந் தனி லழைத்துநல் கீர்த்தியைப் போக்கும்
துட்ட லவ்வா மாயிது தான் தூரநிற்பாய் நீ.

நல்கருமந் தனிலழைத்துநல் நாட்டத்தைப் பூட்டும்
சொல்லு முல்ஹி மாயிதுதான் றொடர்ந்து கொள்வாய்நீ. (6)

தொழுகையுடன் றய்யோன்பயம் மனதிலே பூட்டும்
வழுவில்லாத முத்மஇன்னு வரிசைகொள்வாய் நீ. (7)

அம்மாரத் தெனும் நப்சுடனே இன்னும் லவ்வாமா
எம்மாத்திரமா கிலுமடரா திருந்துகொள்வாப் நீ. (8)

நாலில்ரண்டை தவிழ்ந்துரண்டை நயந்து பிடித்தால்
மாவில்லாத பயணவேளை மதிப்படைவாய் நீ. (9)

அல்லாவைபயந் தேஹவாவை யகற்றுவர் மற்றோர்
எல்லாம் பயணம் போனதெவ்வூர் இதையுணர்வாய் நீ. (10)

மவுத்தை யகன்று பயணந் தவிழ்ந்து மாநிலத்திலே
சவுத்தா மவுத்தைப் பற்றுரெவர் சாற்றக்கேளு நீ. (11)

தோங்கல்.

மவுத்து என்பதைப் படையாவிடில் மனுவோர் மவுலாவை நினைக்க மாட்டார், மவுத்தை ஹயாத்துக்கு முன்படைத்தான் மலக்குல் மவுத்தையும் வகுத்துவைத்தான், மவுத்தை தட்டியே விலகி கொள்ள மன்னோன் படைப்பிலே ஏதுமில்லை, மவுத்தை வெறுட்டியே இருந்தோரெவர் மவுலகேளுங்காள் ஆகில்களே. (12)

கண்ணி ராகம்.

தனது கரத்தில்அல்லா தானமைத்தே தெரிந்தெடுத்த
மனதார சுவனம்பெற்ற மன்னர்பாவர் ஆதமெங்கே. (13)

ஒன்பதரை நூறு உயர்வாம் வயதைப் பெற்று
துன்யாவில் வாழ்ந்திருந்த துய்யநபி நூஹு எங்கே. (14)

அன்பாக கோஹேதூரில் ஹக்கனுடன் வசனித்து
நன்று தவ்றாத்பெற்ற நாதர்நபி மூசாஎங்கே. (15)

இரும்பை மெழுகுபோ விளக்கும் சக்தியுடனே
அருமைஸபூர் பெற்ற ஹக்கன்னபீ தாவூதெங்கே. (16)

எவரும் செலுத்தா செங்கோல் இன்சுஜின்க ளுயிரனமேல்
பவுருய் நடத்தும் நபீ பண்பார் சுலைமானெங்கே. (17)

பற்பல நோயகற்றிப் பதிந்த மையத்தெழுப்பி
மர்மங்கள் பலதறிந்த மன்னர்நபீ ஈசாஎங்கே. (18)

அணிந்த கபுசுடனே அறுஷேரி ஹக்கனிடம்
மணிவாய் திறந்துபேசும் மன்னோன் மஹ்பூபு எங்கே. (19)

இன்னும் நபிகளிலே எத்தனையோ பேருலகில்
அன்பாய் பிறந்து வாழ்ந்தோ ரவர்கள் சென்றதானமெங்கே. (20)

இதுபோல எத்தனையோ அவுலியாக்கள் சாலிஹீன்கள்
பதுமையாய் பெயரை பெற்றோர் பயணங்கொண்டு போனதெங்கே.

எத்திசையுமோர் குடையா யாண்டசுல்தான் சிக்கந்தர்
மெத்த செங்கோல் யாவும்விட்டு மீண்டுபோன தானமெங்கே. (22)

பின்னும் பிலத்தையாண்ட பாதுஷாக்கள் சுல்தான்கள்
நன்றாள்கை செய்தோரெங்கே நாடெங்கே தேசமெங்கே. (23)

இன்னும் நபிகிளைஞர் எற்றத் தோழர் அசுஹாபுகள்
பின்னுந் தாபிஈன்கள் *பிரியஇரு கூட்டமெங்கே. (24)

அவர்களெல்லாஞ் சென்ற ஆகிரத்தூர் நாம்போக
தவராமல் மவுத்து நம்மேல் தானொருநாள் வந்தடுக்கும். (25)

அல்லாவுக் குவந்தவர்தான் ஆகிரத்தூர் போனதென்றால்
பொல்லார் போகாஉலகிற் பொருந்தி இருந்திலைகேள். (26)

---

* தபஅத் தாபஈன்கள்.

வேறு.

மவுத்தை புணராமல் மன்னேன்றனே மறந்து
கவுத்துவம் பேசும்பலக் காபிர்கள் மாண்டதை கேள். (27)

ஆண்டவன் நானேஎன்று அஹங்காரம் கொண்ட நம்றூத்
கூண்டோ டொழிந்தானே கொசுக்கடியால் மாண்டானே. (28)

படற்புவியை யோர்கொடையா யாண்டுவந்த பக்தநஸர்
அடற்செங்கோல் தன்னைவிட் டனுதியாய் செத்தானே. (29)

ஆயிரகணக்கான ஆசுசுகம்பெற்ற *ஷத்தாத்
போயினன் யாவும்விட்டுப் புலம்பித் தொலைந்தானே. (30)

மூசா நபீபகைவன் முட்டாளு பிர்அவ்னுங்
கூசாமல் நீலாற்றில் கூவி யொழிந்தானே. (31)

கனமான பொக்கிஷத்தின் கருமிப்பயல் காறூன்
தனம்விட்டு பூமிக்குள்ளால் தான் சொரியப் பட்டானே. (32)

நல்பதி நூராண்டாய் நான்குகாதங் கட்டி ஷத்தாத்
மல்வூ னதைப்பார்க்கா மாநிலத்தில் மாண்டானே. (33)

மரியம்மகனார் ஈசா நபியை வெட்ட
துரிதஞ்செய் தித்தானூஸ் தூக்கிலே மாண்டானே. (34)

வள்ளல் முஹம்மதுடன் வம்புநாளும் செய்யும் ஜஹல்
பள்ளாடு போலறுந்து பதுர்படையில் மாண்டானே. (35)

மலையின்மேல் நின்றுநபீ மார்க்கஞ் சொல்லக் கேட்டலஹப்
குலைகொதித்துக் கல்லெறிந்தோன் கும்பிநொந்து செத்தானே. (36)

அன்பரே இவர்களெல்லாம் ஆமுதித்தே மானிடராய்
நன்றுள்கை சம்பத்தால் நாயன்றனை மறந்தாரே. (37)

அல்லாவை மறந்தரசன் அகஸ்மாற்றாய் மாண்டதுவும்
நல்லார் மவுத்தைப் பெற்ற நற்செய்தி கேட்டுணர்வீர். (38)

* ஆதுடைய மகன், ஷத்தா தென்றறிக.

தோங்கல்.

வகபு இப்னேமு னப்பஹ்ரலீ வகுத்தனர் கேளுமோ ரரசன்
உகப்புட னவன்சபரைநாடி உயர்த்தியாகிய உடையுடுத்தி
துகை மிகப்பெருங் குதிரைஏறி துணைக்கி சதுர்புறம் பாராவுடன்
மிகைப்புடனூர பாரமாக மேன்மையுடனவ னேகும்போது. (39)

அந்தவழியிலே அழுக்காடையை அணிந்தக் கோலமாயொரு பகீ
ரும், வந்து அரசனின் எதிரில்நின்று வழங்கினர்சலா முன்அலைக்
கும், விந்தை சலாத்துக்கு பதிலுரைக்கா வேந்தன்பெருமையாய்
போகும்போது, பந்தமுடன்பகீர் பகரலுற்றூர் பண்பாய் *சாரியை
நிறுத்துமென்றே. (40)

கடிவாளந்தனை பிடித்துகொண்டு கனதியாம்பகீர் நிருத்தும்நேரம்
வடிவுடனப்போ ஆள்கள்சொன்னூர் வகைமதியற்ற ஆளனேகேள்
படியரசாகு மெனப்புகழ்ந்தும் பயங்கள்பூட்டியே பகரலுற்றூர்
அடியனேகேளும் ஐபக்கீரே அதபுக்கேடனே விடுமினென்றூர்.(41)

உரைக்கஆள்களும் கேட்டபகீர் உரைத்தனர் ருஜன் முகத்தை
நோக்கி, முறைகள் சிலதுண்டு மெனக்குஎன்க மொழியதைக்கேட்ட
வரசனப்போ, குறைகள்உமதெனக் குரையுமென்று குதிரைவிட்
டவ னிறங்கநாட, உரைத்தனர்†கோவே இறங்கவேண்டா முறை
யிப்போதேநா னுரைப்பே னென்றூர். (42)

அரசனவ்வுரைக் கேட்டவுடன் ஆப்பகீருனக் கென்னவேண்டும்
மரமஞ் சொல்லென்று செவியைதாழ்த்த மலக்குல்மவுத்துநா
னென்றுசொல்லிப், பரனமற்படி இந்நேரமே ||பரியின்பேரில் நீ
இருக்கும்போதே, சரசஉன்றூஹை கொள்வேனென்று சாற்றலைக்
கேட்ட உடனேருஜன். (43)

* சாரி என்பது, குதிரை என்றறிக.

† கோவேஎன்பது, அரசனே என்றறிக.

|| பரிஎன்பது, குதிரை என்றறிக.

முகத்தின்வடிவது தானகன்று மொழியும்நாவிலே சக்தியற்று பகருவான்கேளு மலக்குல்மவுத்தே பாவிஎன்னுட மனதுக்குள்ளே, உகப்புகள்பல வனந்தமுண்டும் உவையெலாமெனை விட்டிந்நேரம், சுகந்தராமலே ஒதுங்கிட்டது சோம்பினன்குறை யுகந்துகேளீர். (44)

சற்றுதாங்களுந் தவணை தந்தால் சாருமென்னுட மனைக்குசென்று உற்றவென்னுட மனைமக்களா லுத்தாரங்கேட்டு வருவேனென்க நற்றவசொல்லை கேட்டகாலன் நாட்டமுன்னது முடியாதென்று பற்றிக்கொண்டன ருடனேயந்த பாராஅரசனின் றாஹைறதானே. ()

வாகனந்தனி லேறிக்கொண்டு வலுப்பசம்பத்தாய் சென்றருஜன் யோகம்போயவன் றலைகீழா உடற்சவமாகித் தரையில்வீழ ஏகிஞரப்போ காலனுரும் இருந்தஆள்களு மடிமைதம்மால் வேகியோர் பெயர் பெற்றுக்கொண்டு வேந்தன்பிணமாகி வீணிலானுன். (46)

வேறு

நலத்தஅமல்களை யுகந்துசெய்வோர் நண்பொடுசயர் போகும்போது மலக்குல் மவுத்தவ ரெதிரேவந்து மன்னவன்அல்லா தனக்குவப்பாய், நலஞ்செய்யடியரே உம்முடனே நானோர்ரகசிய மானதுவை, கலந்துப்பேசிட வேண்டுமென்க கருத்தையிப்போதே கழருமென்றூர். (47)

அப்போதருளினர் மலக்குல்மவுத்து ஆகும்நானென்க கேட்டநல்லோர், மெப்பாய் மற்றுபா மற்றுபாநான் மேன்மை யும்மையு முவந்துநாடி, எப்பதான் தாங்கள் வருவீரென்று மிருக்கையில்வந்தீரென்னைகண்டீர், செப்புமிவ்வேளை நாழிகையை சிறப்பாயினிகாண்க முடிந்திடாது. (49)

பற்றுமென்னுட றாஹைறஎன்கப் பகருவாரப்போ காலனுரும் நற்றவத்தோரே உம்முடைய நாட்டத்தையிப் போமுடித்துவாரும் பற்றுவேன் தங்கள் றாஹைறஎன்கப் பகருவார் நல்லோர்* ஹாயே

*ஹாயே அப்சோஸ் என்பது, ஆஹ்கை சேதம் என்றறிக.

அப்சோஸ், வெற்றியிதைக்காண வேருவேலே விருப்பங்கொள்வே ஞே என்றுபின்னும். (50)

என்றன்எஜமானின் சமுகம்யானும் ஏகுமானதோ ரனுவல்காண பின்ஞோரனுவனு மில்லேயிப்போ பிரியமாய்றூனைறப் பற்றுமென்க இன்பமாயப்போ மலக்குல்மவுத்து இந்தஹாலிலே பற்றலாமா என்றுகேட்கவே ஆனுல்சற்றே இரும்பொருமென உரைக்கலுற்ருர்.

அடவுடன்நானு முனுவுசெய்து ஹக்கன்ருெழுகையி லானபின்னர் படற்புஸ்தனி லெந்தனெற்றிப் பதியவேயானும் சுஜூதிடும்போ நடனமாகுமென் றூனைறபற்றும் நானெனன்றலேய தி ஞல்கடந்து அடவுடன்போவே னென்றுசொல்ல அவர்தம்விருப்பம்போல் காலன் செய்தார். (52)

அல்லல்துனியாவி ஞசைவைத்த அரசன்மாண்டதை யறிந்துணர்ந் தீர், தொல்லேயுலகத்தை நம்பிடாமல் துய்யோனேவல்போ லல்பக ஆம், நல்அமல்செய்து ஆகிரத்தூர் நலமாய்போகவே சந்தோஷமாய், எல்லேயுடன்சென்ருேர் கூட்டத்திலே இறையோன் எமைசேர்க்க ஆமீனுமீன். (53)

நலம்பொல முணராக் காலமனுவுகள்.

தோங்கல்.

அருளினர்கேளும் அஹ்மத்நபி அன்பானஎந்த னும்மத்தோர்மேல் ஒருகாலம்வரு மதிலீமான்பேர் உண்மைபாகியா இருந்திடாது பெருகு மிசுலாத்தின் சடங்குமட்டும் பாகியாகவே இருக்குமென் றும், சிரியோர் பாஸிகா யாவாரென்றும் செப்புவார் பொய்யைப் பெரியோரென்றும். (1)

இன்னுமவர்கள்தீன் பணமாகிடும் இவர்பெஞ்ஜாதிமார் கிபுலாவென் றும், பின்னும் பெரும்வய ருள்ளோராயும் பிசகாதவர்களின் செயல்களெல்லாந், துன்பஷைத்தானின் செயலாகிடுந் துடரும்வார்த் தைகள் துனியாவுக்கே, என்றும்பேசுவா ரிவர்கள்பேரி லெப்போது மாகும் லகுனத்தென்றூர். (2)

காலமாமிந்தக் கடேசிகாலங் கத்தன்னபி ஏவல் கருதாகாலம்
ஆலநபியும்மத் தென்றகாலம் ஆகாகருமத்தை செய்யுங்காலம்
வாலவயதினை நம்புங்காலம் வம்பாம் பொய்ஹரு மிகுத்தகாலம்
நீலனிபுலீசுக் கிணங்குங்காலம் நிச்சயமிந்தக் காலந்தானே. (3)

பதினன்காம்*சித்தியில் பிறப்போர் பண்பானநலம் பொலமறியார் அதிபதிவல்லான் றனைமறப்பார் அஹ்மத்நபி செயல் சொல்விடுவார் சதிமானஹருந் தனையுகப்பார் சங்கையற்றவர் மிகுப்பாரென்று மதிப்பாய் முன்னுளோர் சரித்திரத்தில் மவுலுமத்தாட்சி சுருக்கங் கேளீர். (4)

பதினோராண்மக்கள் நபியஅகூப் பரிவாகப்பெற்ற பிள்ளைஎல்லாம், மதிப்பாய் வளமைபோல் வனங்களிலே மரிமாடொட்டகை மேய்க்குமப்போ, அதிபன்நாட்டம்போல் நபியவர்கள் அழகார் யூஸுபு மகனைப்பெற்று, பதியில் பனிரண்டாம் பிள்ளையாகப் பாங்காய் பிரியமாய் வளர்க்கும்போது. (5)

சங்கை வடிவுள்ள மகன் யூசுபை சருகாதுதந்தை நபீயஅகூப்,
அங்கமுடன்முத்தி முகந்துக்கொண்டு மன்பாய்கொஞ்சியே வளர்த்துவருந், தங்கள்தகப்பனு ருகப்பைகண்டு தந்தையைவிட்டுந் தந்திரமாய், மங்காதொளிதங்கும் தம்பியாரை மகிழ்வாய்பிரிக்கவே மனதில்நாடி. (6)

தந்தையஅகூபு நபியிடத்தில் தம்பியூசபை எங்களுடன்
விந்தையாய்காட்டுக் கனுப்புமென்று விருப்பமாய் கேட்க நபியுரைப்பார், சிந்தைக் குவப்பான பாலர் யூசுப் சிருபிள்ளை என்றுந்தடுத்துங் கேளா, அந்தமாகவே பார்ப்போமென்று அனந்தம் நாட்கேட்க ஒரு நாளையில்.

அழகார் நபீயூசுப் அவர்கள் தம்மை ஆடுமேய்க்கவே தமையமார்கள்
அழைத்தபோல்நபீ யகூபவர் அருமை யூசுபை பத்திரமாய்

* ஸித்தியர் என்பது; நூற்றாண்டில் பிறந்தோர்.

நிழலி விருத்தியுங் கோணுகொள்ளா நேர்மையுடன் காருமென்ற னுப்ப, அழைத்துப் போய்கோணு திண்டதாக அழுதுமக்களும் வந்தார்களே. (7)

கண்ணிராகம்.

அப்போது நபியஅகூப் அழுதுக்கொண்டு ஓநாயை
தப்பா தழைத்துகேட்க தனியோன் மேலாணையிட்டே. (8)

ஓநாயுஞ் சொன்னதப்போ உம்மகனை யுண்டிருந்தால்
நாறுவேன் பதினுன்காம்*சித்தியர்பேசம் பாவத்திலே. (9)

குறைமக்கள் சொன்னதையும் கோணுசெய் சத்தியமும்
முறையாய்ந்து நபீயஅகூப் ஓயா தழுகலுற்ருர். (10)

தந்தை நபீயஅகூப் தம்மகனை நினைத்தழுத
அந்த சபயில் கண்போய் ஆனுரே அந்தகராய். (11)

விசளம் விரிவதினுல் விபரிக்க நூல்சிரிது
அசலாங் கருத்துரைக்க யன்பாகக் கண்டுணர்வீர். (12)

சில காலம் சென்றுநபீ யூசுப் ருஜாங்கம்
நலங்கேட்டு மிசுருக்கு நபியஅகூப் வந்தாரே. (13)

தகப்பரைக் கண்டயூசுப் தனியோன்றனைப்புகழ
உகப்பாக நபியஅகூப் உடையோன் கிருபையினுல். (14)

வளமைபோல் சுண்ணொளிவு வரக்கண்ட நபியஅகூப்
அழகார் மகன்மனையை அன்பாக பார்க்கலுற்ருர். (15)

மகனுரின் சல்தனத்தும் மருமகள் பணிவிடையும்
உகப்பாக கண்டுநபீ உடையோனைப் புகழலுற்ருர். (16)

மகனுரு மருமகளு மாளிகையி லிருமென்க
உகப்பான ஓலையின் ஓர்குடிசைப் போதுமென்ருர். (17)

எங்கள் செங்கோலுக்கு இகழ்ச்சியா குமதனுல்
தங்களுக் கேற்றதனி மாளிகைத் தாரோமென்ருர். (18)

மாளிகை மச்சுவேண்டாம் மாசில்லா என் கண்ஆனின்
தாழ்மை குடிசையது தருமாகப் போதுமென்ருர். (19)

தந்தைக்கி சிம்மாசனம் தனதரசின் பொக்கிஷங்கள்
அந்தமுள தாள் நிறைந்த அல்மாரை பார்க்கசெய்தார். (20)

தாள்களைப் பார்த்த தந்தை தம்மகனை என்னவென்க
தாளிதில் செய்திகளைத் தாமெழுதி அனுப்பவென்றார். (21)

துண்டொன்றில் ஆபியத்தை தெரிவிக்கலை என்றுகேட்க
துண்டெழுத ஜிப்ரயீல் தட்டிவிட்டார் பாவாஎன்றார். (22)

என்றப்பே என்மகனார் யூசுபவர் ஆபியத்தை
நன்றாக நானறிய நாடியவர் தாளெடுத்தே. (23)

எழுதும் மகனாரை எதுக்கல்லா நீ தடுத்தாய்
பழுதில்லா சீட்டுவந்தால் பார்த்து மகிழ்வேனென்றார். (24)

அப்போது ஹக்கன் சொன்னான் உம்மகனை என்புறமாய்
ஒப்ப முடன் சாட்டா ஒனுயை பயந்ததென்றான். (25)

வேறு.

பதினான்காம் நூற்றாண்டில் பிறப்பவர் பலீஹத்தை
நிதியாக ஓர் ஷைகின் நேர்சொல்லைக் கேட்டவர்கள். (26)

சவுதவீன் சித்தியர் சங்கையற்றோர் யாதுக்கென்க
தவறாது ஷைகுகாட்டும் தகமை யறிந்துணர்வீர். (27)

ஷெய்கவர் ஒரு ரூபாய் தில்மீ திடங்கொடுத்து
மெய்கோதும் பைவாங்கி மாவரைத்து தாருமென்றார். (28)

கோதுமை வாங்கிகுத்தக் கொளிக்க அரைக்கச் செய்து
நிதியா தரஷைகு மாவில் ரூபாயெடுத்தே. (29)

தில்மீ திடந்தந்து தீரவிஜாரித்திதனை
எல்கை யுடனீந்து என்னிடம் வாருமென்றார். (30)

அந்த ரூபாயை தில்மீத் அன்பா யெடுத்துக்கடைச்
சொந்தக் காரனிடத்தில் சொன்னார் பெற்றுகொள்ள. (31)

கடைக்காரன் சொன்னனப்போ காசைபெற்று கோதிதந்தேன்
திடனுக இந்தரூபா தீரஹறு மெனக்குஎன்றான். (32)

பின்குத்தி கொளித்தவைத்த பெண்கள் சொன்னு ரிந்தப்பணம்
இன்பாக எம்மிலில்லை எமக்கு ஹறும்என்றார். (33)

இந்தசெய்தியை நில்மீத் எடுத்துரைக்க ஷெய்கிடத்தில்
விந்தையா மிந்தசெய்தி வந்துநாளைப் பாருமென்றார். (34)

அடுத்தநாள் சவுதவின் சித்தீயின் நாள்பிறக்க
சடுக்கென்று கடைக்காரன் ஷெய்கிடத்தில் வந்து சொன்னான். (35)

என்னிடம் கோதும்பையை இன்னஆள் நேற்றை வாங்கி
அன்பாக காசளிக்கா அனியாயஞ் செய்தாரென்றான். (36)

அப்பவே குத்தினவள் கொளித்தவளு மறைத்தவளும்
ஒப்பமுடனே வந்து ஓவைகே என்றுரைப்பார்.

தங்கள்ஆள் நேற்றை எம்மில் தவரிவிட்ட ஒருரூபா
அங்கமுடன் தந்தா ரதைவாங்கித் தாருமென்றார். (37)

இந்த சமயத்திலே ஏற்ற உஸ்தாத் வைகிடத்தில்
வந்த நில்மீத்களுக்கு வளர்சித்தி வகையுரைப்பார். (38)

நேற்றைநாள் முன்ஸித்தி இன்றைப் பிறந்தவஸித்தி
மாற்றமிந் நால்வர்களால் மதித்து தாங் கொள்ளுமென்றார். (39)

சவுதவீன் ஸித்தியர் சட்டம் ஹலால் ஹறாமின்
மவுன மறியாசிலர் மாபாவி யாவாரென்றார். (40)

இந்தப் பதினான்காம் நூற்றாண்டில் பிறந்தசிலர்
நிந்தனைப் பாவங்களை நேர்நலமென் றெண்ணிசெய்வார். (41)

நலஞ்செய்ய ஏவினர்க்கும் நன்றுகந்தே செய்தவர்க்கும்
தலமாகி ரில்கூலி தருமாய் கிடைக்குமென்றும். (42)

பாவஞ் செய்வோர்க்குதவி பரிசுகெட செய்தவர்க்கும்
தாவுமப் பாவமென்றே தாஹா நபியுரைத்தார். (43)

நீதி நேர்மையுணரா நெஞ்சகர்க்கு முன்னொருவர்
ஆதில் தமைதிருத்தும் ஆகமந் தனையுரைப்பாம். (44)

தோங்கல்

குற்றமாஞ் செயலொருவர் செய்யக் கூர்மையாய் கண்ட மற்றொருவர் ஒற்றுமையாகாத் திருத்தவேண்டும் உகந்தா லவருக்கும் பாகமாகும், நற்றவத் தோர்கள் குறைகள்கண்டால் நலமாய் திருத்தியே பலன்பெரும்போல், உற்றக்குறையாய்ந்து திருத்தும் நல்லோர் ஒருஹிக்காயத்தை யுரைக்ககேளீர். (45)

ஷறஇன் சட்டம்போல் நேமமாக சருகா நடத்துமோர் ஆதிலவர் உறமாய் உஸ்க்கியின் குணமுணர்ந்து உற்றத்தனதாளுக் குறைக்க அற்றார், திறமா யுஸ்கியிலிரண்டுபோதல் தீவரம்மாக வாங்கிவந்தால் சரச மாயதை யான்குடிப்பேன் சருகாதிப்பவே தாருமென்றார்.(46)

அந்த மொழிகேட்ட புத்திசாலி ஆளன் யோசித்தார் மனதுக்குள்ளே, பந்த முளஆதில் உஸ்கியதைப் பருகினல் மஸ்த்தால் வெரிவரிடும், நிந்தனையாகும் நீதம்போகும் நிலத்தார் சிறிக்கவே நேருமென்று, சிந்தைக்கலக்கமாய் உஸ்கிக்கேற்ற சிறப்பாம் வஸ்துகள் வாங்கலுற்றார். (47)

குடித்த வெரிக்கேற்ற தாசிவேணும் கோதை நோய்க்கேற்ற சிகிச்சைவேணும், அடவாய் புண்கட்டி யாகிவிட்டால் அறுக்கஆயுதம் டாக்டர்வேணும், மிடிதீராவிட்டால் வைத்தியரில் மேன்மையூனனியொருவர்வேணும், கடிந்தும் பார்த்தவாள் குணமாகிடா கட்டியால் ஆதில் காலமானல். (48)

மையத்தின் தபன் சாயான்வேணும் மஹல்லா கத்தீபுமோதீன் வேணும், அய்தமுடன் சந்தூக் பென்சுவேணும் அடவாய் குளிப்பாட்ட *கஸ்ஸால்வேணும், துய்தாளடுக்கஆள் நான்குவேணும் தூரத்துற்றார்க்கு அறிக்கைவேணும், செய்புந்தபனுக்கு குழியும் வேணும் சீராஇவைகள்முன் வேணுமென்றே. (49)

மனதிலெண்ணியே துகையுடன்போய் மஸ்த்தாம்உஸ்க்கியின் சாமானெல்லாம், தனதுமனம்போல சேகரித்து தகுமாளஜமானின் திரு

*கஸ்ஸால் என்பது, குளிப்பாட்டுவோர்.

முன்வர, சினந்துஎஜமானும் ஆளைப்பார்த்து சீக்கிரம்வாரா தேதுக் கென்க, எனதுஎஜமானே உஸ்கிசாமான் எல்லாந்தரநேர மான தென்றூர். (50)

அப்போதெஜமானும் உஸ்க்கிஎன்ன அதற்கேற்றசாமான் யாது வென்க, ஒப்பமாஉஸ்கி குடித்தஉடன் உமக்குத் தேள்வையி தெல்லாமென்று, மெப்பாய் பின்போயி வேண்டாயில்லா மேன்மையா முன்னூல் தந்தேனென்று, தப்பாதொவ்வொன்றின் விவரஞ்சொல்லி தய்யா ருமக்காச்சு குழியுமென்றூர். (51)

இந்தக்காட்சிகள் எஜமான்கண்டு ஏற்றஆள்சொல்லும் விபரங் கேட்டு, நிந்தனையிந்த உஸ்கியினுல் நேரும்வகையெல்லாந் தெரிந்து கொண்டேன், வந்தவைத்தியர் டாக்டருக்கு வகையாமாள்கட்கு பரிசுதந்து, அந்தமாகமுன் அனுப்பென்கவே அப்போதாள்சொன் னூர் தாழ்மையாக. (52)

அருமையுடனுஸ்க்கி குடித்தீராகில் அவசியமெல்லா மிவைகளென்க ஒருபோதுமிந்த உஸ்கியதை உகந்துகுடித்திடே னென்றுரைக்க, தருமச்சொல்லிது உண்மையானுல் தரையில் உஸ்கியைக் கொட்டு மென்க, சருகாகொட்டியே வந்தோர்களே. ஐடுதியில்முன்னே அனுப்புமென்றூர். (53)

இந்தவிதமாக எவரிலேனும் எதுங்குறைகண்டால் திருத்தவேணும் அந்தமாகவே திருத்துவதால் அவர்கள்தின்மைவிட்டகலும்நன்மை பந்தமுடனே தான் ஹக்தஆலா பாகந்தருகுவா னென்றிதனை சிந்தைமகிழ்வாக அறிவாளர்கள் செப்பினூரிதை யறிந்துணர்வீர். ()

அருளினர் லுக்மான் மகன்றனக்கு அமல்க ளுனதுகேழ் வரகொற் றூலும், சருகாதவ்வமல் கல்லுக்குள்ளும் சார்ந்தவான்பு விக்கிடை யிலெங்கும், மருங்காய் மறைவாக இருந்திட்டாலும் மன்னேன் திருமுன்ன மவ்வமலே, ஒருங்காய் சேகரம்செய்வானென்று உரைத் தா ரெனசொன்னூன் புறுகானிலே. (55)

ஏழாம் பூமிக்குள் தஹ்த்தஸ்ஸரா என்னும்பூமியில் கறுங்கல்லதில் மீளாக் கருப்பான கருப்பெறும்பு மெதுவா யூர்ந்துமே நடக்கின்றதை ஆளு மிறையவன் குதரத்தினுல் அடவாய் பார்க்கிரு னென்றறிந்து நாளும் மூமினோர் இருதயத்தில் நாயன் றனக்கஞ்சி நடப்பீர்களே.

பிதஅத்தை கண்டு திருத்தஞ்செய்யா பேசாஊமைபோ லுள்ள ஆலிம், கதரின்கைருஷற் றறியாபணங் காசுகிடைத்திடில் போது மென்று, இதமாய்நாயனின் அச்சமில்லா இடர்ஜாஹிலுட னுடந் தையாவோர், நிதமாம்மார்க்கத்தை விட்டகன்ற நிலையற்றஊமை ஷைத்தானென்றார். (57)

ஹக்கன்பாதையில் ஷஹீதாகுவோர் ஆகாகாபிர்கள் மேலெதிர்க்க தக்க தனதில்லம் மனையைவிட்டு சுகுமாவாயுதம் பலதும்பூண்டு ஷக்கில்லாமல்போய் வெட்டுபட்டோர் சருகாதொருஷஹீத் ஜீவித் துள்ளோன், மிக்கஒருநூறு ஷஹீதுபலன் மேன்மைபெரும்ஹதீஸ் அருளகேளீர். (58)

சிந்தைமகிழ்வாக நபியுல்லாதாம் செப்பினுரொத்த னெனதும்மத் தில், பிந்தியபஸாத் நாளையிலே பிசகாதென்சுன்னத் விர்த்திசெய் தால், அந்தமுளநூறு ஷஹீதுபலன் ஆகுமென்றிதை யருளிசெய்தார் இந்தபலன்பற்ற எம்யாவர்க்கு மிறையோன் தவ்பீகைத் தருக ஆமீன். (59)

ஆதம்மகனேநீ யுதிக்கும்போது அவனிதனையுற்றே அழுதுவந்தாய் போதமுடனப்போ உன்இனத்தோர் பூரித்தகமகிழ்ந் தேநகைத் தார், நீதமுடனுந்தன்பயணமப்போ நிலத்தாரழுகவும் நீசிறித்து, வீதமுடனேக பிஸ்மில்கொண்டு விளங்கஇந்நூலே துவர்கஞ்செய் தேன். (60)

———:o:———

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

கித்தாபின் துவர்க்கம்.

பிஸ்மில்லா(ஹ்)வின் மகிமை.

கண்ணி ராகம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீமின் மகிமை
விஸ்வாச மாய்கேட்டு விரைந்தோதும் பிஸ்மில்லாஹ். (1)

அல்லாவின் ரகசியங்கள் அனந்தம் பொதிந்துளதால்
எல்லாக் கித்தாபின்முதல் எழுத்துக்கண்டோம் பிஸ்மில்லாஹ். (2)

ஆரம்பம் செய்புமெவ்வோர் அன்பான காரியத்தில்
சீராகும் யாவற்றுமே செப்புவதால் பிஸ்மில்லாஹ். (3)

எக்குறை வேனும்வரா எதுங் கெடுதியில்லா
மிக்க பறக்கத்தாகும் மிகுத்தோதும் பிஸ்மில்லாஹ். (4)

துனியாவு மாகிரத்தில் துப்தாபாம் வேண்டுதல்கள்
மனப்பூ ரணமாகும் மகிழ்ந்தோதும் பிஸ்மில்லாஹ். (5)

குற்ற மகற்றப்படுங் குறைநேர்மை யாக்கப்படும்
உற்றப் பதவியுண்டா மோதுவதால் பிஸ்மில்லாஹ். (6)

குறுஆன் திருமுகத்தில் குறையா தொளிவிலங்க
அறுமையாய்ப் பார்த்துக்கொள்ளும் அன்பான பிஸ்மில்லாஹ் (7)

கஷ்ட மகன்றுவிடுங் காரியங் கைக்கூடும்
நஷ்ட்ட மில்லாதாக்கும் நயந்தோத பிஸ்மில்லாஹ். (8)

அல்லா(ஹ்)வி னீடேற்ற மவன்பொருத்த மாவதற்கு
நல்வித மல்லும்பகல் நாடியோதும் பிஸ்மில்லாஹ். (9)

ஆனதால் பிஸ்மில்சங்கை யடியிற் சிலதுரைக்க
தீனவர் தெளிந்தோத தேட்டங்கொடு யாஅல்லாஹ். (10)

அல்லாஹு அல்லாஹு என்றஹ்ஸன் நாடிகெஞ்சி
நல்லாக கேள்ப்பதேற்பாய் நாயகனே யாஅல்லாஹ். (11)

———:o:———

பிஸ்மில் லா(ஹ்)வின் சங்கை.

சுறுக்க மஸனவீ இராகம்.

முஸ்லி மான ஆண்கள் பெண்கள் செவியில்
பிஸ்மில் பொருளைசொல்லக் கேளும்அடியில். (1)

அல்லா வின் திருநா மத்தை தக்கொண்டும்
நல்லா துவர்க்கஞ் செய்தே னென்பதாகும். (2)

ஹதீஸ்.

பிஸ்மில் லாஹிர்ரஹ்மா னிர்ரஹீமில்
பிசகா தெழுத்துகள்பத் தொன்பதவையில். (3)

பத்தொன் பதுமலக்கு நரகத்திலே
மெத்த காப்பவர்க ளுண்டு மதிலே. (4)

ஓத்தன் பிஸ்மில்லாவை ஓதக்கேளும்
பத்தோன் பதுமலக்கின் தீங்ககன்றும். (5)

பெருகு வான்வெற்றி என்றுநபியும்
அருமை யாகசொன்ன ரறிந்துகொள்ளும். (6)

தோங்கல்,

பரிவாய் அபூலைதீ தமர்கந்தீ பகர்ந்தா ரொருஹதீஸ் மூமினொத்தன் உரியப் பழக்கத்தில் கலிமாயேழை உகப்பாய் நாவிலே கொடுவந்தோன்மேல், அறியப் பெரியோனு மலக்குகளு மன்பாயுகப்பாகுவார்களென்றும், சருகா தவன்பாவங் கடல்நுரைபோல் சார்ந்தே இருந்தாலும் பொருப்பாமென்றும். (7)

அந்தக் கலிமாக்கள் எழிலொன்று அடுக்குமொவ்வொரு கருமத்திலும், பந்தமுடனேதான் பிஸ்மில்லாவைப் பண்பாய்கொண்டுமே துவர்க்கம்செய்யல், எந்தக் கருமமு முடிவடைந்தால் இயம்பல் அல்ஹம்து லில்லாஹியை, பிந்தி வருமொவ்வோர் கருமத்திற்கும் பகர்வதுஇன்ஷா அல்லாஹ்வென்றே.

நாலா வதுபாவச் செயலெதிர்த்தால் நலமாயோதுதல் லாஹௌலாவை ஓலமுடன்முசீ பத்தடுத்தால் உரைப்பது இன்னா லில்லாஹியை சில முடன்னுளும் மிகுதமாக சிறப்பா யோதுவ திஸ்தக்பாரை காலமும்லாயி லாஹவெனுங் கலிமாஓதல்அல் பகலுமென்றார்.

எல்லாப் படைப்புக்கு மேற்றமான இறசூல் முஹம்மது நபியுரை கேள், வல்லோன் திருநாம மூவாயிரம் வகையா யுண்டதி லாயிரத்தை, நல்லார் நபிமார்கள் தமக்களித்தான் நலமா யின்னுமோராயிரத்தை, எல்லா மலக்குகள் தமக்களித்தான் இதமாயின்னுமோராயிரத்தை. (7)

வேதம்தௌறுத்து இஞ்சீல்ஸபூர் விளம்பும் இம்மூன்றில் வகைக்கி முன்னூர், வீத முடன்வைத்தும் புறுகானிலே விளம்பினன் தொண்ணூத் தொன்பதுவை, மீதமொன்றினை யவனறிவான் மேண்மையாயொத்தன் பிஸ்மிலோத, நீதன் திருநாமம் மூவாயிரம் நேர்மையாயோதும் பலனெதென்றார். (9)

ஹதீஸ்.

பதியாம் சொர்க்கத்தில் றஹ்மத்தெனும் பாரமலையொன்று முண்டதனில், மதீன துஸ்ஸலா மென்று சொல்லும் மருங்காம் பட்டணமொன்றதுண்டும், அதிலோ ரழகிய மஹலதுண்டும் ஆகு மதின் பெயர் கஸ்ருஸ்ஸரூர், இதிலோர் பைத்துல்லா வெனும்வீடுண்டு மிதற்குவாயல்நான் காயிரமே. (10)

இந்தவாயல்க ளெல்லாத்திலு மின்பாய் நாடிடும் வாய்ப்புக அந்தமுடனவல் வைப்பவர்கள் ஹக்கன் திருநாமம் பிஸ்மில்லாவை சிந்தை மகிழ்வாக செப்பினோர்கள் சிறப்பாய் புகுதுவா ரென்றிதனை கந்தங் கமழ்ந்திடும் நபிஇறசூல் கருணை மணிவாயா லருளிசெய்தார்.

அப்துல்லாபின் அப்பாஸ்றலீ அன்பாய் ரிவாயத்து செய்வதாக
தப்சீரே இமாம் நாஸிரீயில் தருமாய் வந்ததை யருளகேளீர்
செப்பும் நபிமூசா தங்கள்பேரில் சிறந்தோன் தௌறுத்தை இறக்கும்போது, இப்பெருங்கிதாப் யார்படிப்பார் எவர்தான் மனப்பாடம் செய்வாரென்றார். (11)

அல்லா வருளினுன் மூசாவேகேள் ஆகிர்காலத்தில் வருமென் ஹபீப்
நல்லார் நபிபேரில் தௌறுத்காண நானிறக்குவேன் பெரியகிதாப்
சல்லல் லாநபீ உம்மத்துள்ள சார்ந்தசிருபிள்ளை யாவுமோதும்
தொல்லுலகிலும் உம்மத்தோர்க்குந் துய்தாங் குறையுள்ள வயதோரென்றான். (12)

அந்தமொழிகேட்டு மூசாநபீ ஹக்கனைப்போற்றி யவர்களெவ்வார்
அந்தப்பெருங்கிதாப் படிப்பாரென்று மவர்கள் மனப்பாடஞ் செய்வாரென்க, இந்தஉலகிலே மூசாவேநான் இறக்கினேன் நாரு சுஹுபுகளை, பிந்தி தௌறுத் இஞ்ஜீல்ஸபூர் பிசகாதிறக்கியே இவைகளெல்லாம். (13)

அருமைபுறுகான் எனுமறையில் அடக்கியுமந்த புறுகான் மொத்தம்
பெருமை அல்ஹம்து சூறவிலே பிசகா தொடுக்கியே வைத்துமந்த
மருங்கின்சூரத்தின் வாசகங்கள் மணமா மொத்தமு மென்னுடைய
திருநாமமெனும் பிஸ்மில்லா(ஹ்)வின் இவ்வாக்கினு லமைப்பேனென்றான். (14)

முன்னோன் நபியுல்லா உம்மத்திலே மொழிந்தனர்சில வறிவாளர்கள்
நன்று வான்களை கதிர்மதியால் நலத்த சொர்க்கத்தை ஹறமஹலால், அன்பியாக்களை அஹ்மதரால் ஆகுமாதங்க ளடங்கலையும்
நன்று மாதமாம் றமலானதால் நாட்களை ஜுமஆ வெனும்நாளதால்.

இன்னுமிராக்களை கதரிரவால் எல்லாமஸ்ஜிதை கஅபாவினுல்
முன்வேதங்களை புறுகானதால் மொழியும்குறுஆனை பிஸ்மில்லாவால், அன்புடன்தானே ஹக்தஆலா அலங்கிர்தஞ்செய்தா னெனசொன்னதால், இன்பாய் பிஸ்மிலே மிகஓதியே இதமாய்ப் பலன்களைப் பெருவீர்களே. (16)

கந்தங் கமழ்ந்திடும் நபியிரசூல் கருணைமணிவாயா லருளிசெய்தார்
எந்தனும்மத்தை ஹக்தஆலா எரிநாரைக்கொண்டு மெரிப்பதானல்
அந்தமாகவே பிஸ்மில்லா(ஹ்)வை ஹக்கனிறக்கிடா னென்றதாலே
சிந்தை மகிழ்ந்தென்றும் பிஸ்மிலோதி சிறந்தப் பலன்கள்யாம்
பெருககேளீர். (17)

ஒருவன்பிஸ்மிலை திறுத்தமாக ஓதினல்ஹக்க னவன்றனக்கு
தருவான்நன்மையில் பதினயிரம் தருமாயதுபோல தின்மைகளில்
சருகாதழித்தின்னும் பதினயிரம் சங்கைதரஜாவை உயர்த்துவா
னென், றருமை நபிசொன்ன ரென்றிதனை அபூபக்கர்சித்தீக் றளீ
யுரைத்தார். (18)

சிறுபிள்ளைகட்கு உஸ்தாதுகள் சிறந்தபிஸ்மிலை யோதிதந்தால்
அருமையுஸ்தாதின் விட்டார்களில் ஆரும்நாற்பது பேர்கள்பாவம்
சருகாயப்பிள்ளை வீட்டார்களில் சார்ந்தநாற்பது பேர்பாவமும்
பொறுக்கப் படுமென்று நபிஇரசூல் பொன்னனவாயா லருளிச்
செய்தார், (19)

ஒருயகூதிபெண் உலமாக்களின் உகப்பாமஜ்லிஸில் பிஸ்மில்லாவில்
பெரும்பஸீலத்தை கேட்டவப்பெண் பிரியமாளந்தக் கருமத்திலும்
அருமைபிஸ்மிலை யோதிவர அவள்தந்தைகண்டு கோபங்கொண்டு
கருமமதைவிட மகளாருக்கு கடிந்தும் நயமாயுங் கசடன்சொன்
னன். (20)

அந்தப்பெண்ணுமே கேளாமலே அவள்தன் வளமைபோ லோதிவர
கொந்துமனம்வாடி யவள்தகப்பன் கோவினைப்பல செய்யநாடி
அந்த முடனேதன் கணையாழியை அளிக்க மகளுமே அன்பாய்வாங்கி
சிந்தைமகிழ்வாக பிஸ்மில்சொல்லி ஜேபில்மகள்போட சினந்தவனும்.

நாளைபலீஹத்து செய்வோமென்று நாடியவன்மகள் படுத்துறங்கும்
வேளைப் பார்த்தவன் கவுத்துவமாய் விரைவா யெடுத்தந்தக் கணை
யாழியை, ஆழக்கடலிலே தானெறிய அதையோரழகிய மீன்
விழுங்க, காலை யொருவனும் வலையைவீசக் கணையாழியுண்ட மீன்
பட்டதே. (22)

அந்தமீனதை யஹூதியிடம் அன்பாய் கொடுவா அவன்வாங்கியே பந்தமுடன்மகள் தன்னிடத்தில் பாங்காய் சமைக்கவே கொடுத்த போது, சிந்தை மகிழ்ந்தவள் பிஸ்மிலோதி செம்மையுடன் வாங்கி வயிற்றைக்கீர, விந்தை யுடனந்த மீன்வயிற்றில் விருப்பமுடனொரு கணையாழியை. (23)

கண்டுகளித்தவள் பிஸ்மிலோதி கணையாழியதை ஜேபில்போட்டு பண்பொடுமீனை சமைத்துவைக்கப் பட்சமுடனவள் தந்தையுண்டு விண்டான்கணையாழி தாருமென்று விருப்பமுடனவள் பிஸ்மிலோதி நண்பொடுகையை ஜேபில்போட்டு நலமாங்கணையாழி எடுத்துதந் தாள். (24)

அப்போதவனதை வாங்கிபார்த்து ஆச்சர்யமாக மனதிலெண்ணி மெப்பாம் பிஸ்மிலின் மகிமையாய்ந்து மேன்மையாந்தீனின் மார்க்க மென்று, தப்பாதவனெஞ்சிற் றரிப்படுத்தி தஷஹ்ஹுத் என்னும் நற் கலிமாஓதி, ஒப்பமாகவே அந்நேரமே உடையோன் னபிதீனில் தாகிலானர். (25)

அல்லலுடநாளும் படகுவரி ஆற்றைக்கடந்தொத்தன் அடுத்தஊரில் பில்லுசுமைவிற்று ஜீவிப்பவன் பிரியவாயிஜால் பிஸ்மில்பலன் நல்லவிதங்கேட்டுப் படகுவரா நவின்றே பிஸ்மிலால் வருவன்போ வான், சொல்லும் பிஸ்மிலால் படகின்காசு சுகமாய் தனக்காச்சு மிச்சமென்பான். (26)

இந்தவிதஞ்சொல்லு மொருநாளையில் ஏற்றபிஸ்மிலின் பலனுரைத்த அந்தஆலிமும் ஆற்றங்கரை அடுத்து வந்தவர் நதிகடக்க எந்தவிதமென்று யோசிக்கையில் இதமாய் பிஸ்மில்சொல் பில்லு காரன், பந்த முடன்துகில்துண்டெடுத்தே பட்சமுடன்ஆலிம் தமை யழைத்தே. (27)

அந்த துண்டதை பிஸ்மில்சொல்லி ஆழவாற்றிலே விரித்துவரி வந்து ஆலிமே பிஸ்மில்சொல்லி வரிசையுடனேரும் போவோமென்க அந்த மாஎரஅவர்பயந்து ஆகாதினன்றல் முடியாதென்க, பந்த முடனவன் பிஸ்மிலோதி பாங்காய் நதியதைத்தான்கடந்தான்.

அல்லா(ஹ்)வின் திரு நாமமான அதிகப் பலனுகும் பிஸ்மில்லா(ஹ்)
வை, நல்லா நம்பிக்கை யாகஓதி நயம்பெற் ேறார்நல்ல மஜ்லீசிலே
எல்லா மாண்பெண்கள் சேரவேண்டி இதமாகஎந்தக் கருமத்திலும்
சல்லாபமாக ஓததேளபீக் சருகா துவல்லான் தருகஆமீன். (30)

Q7-417
N50
17665

அல்ஹம்து சூருவின் பலீலத்து.

தோங்கல்.

அல்ஹம்து சூரு அல்லாஉட அறுஷின் புதையவில் நின்றுமொரு
நல்லபு தையலா இருக்குமென்றும் நலமாக எல்லா வஸ்த்துவுக்கும்
வல்ல அடிதள முண்டதுபோல் வரிசைகுறுஆனுக் கடிதளமும்
அல்ஹம்துசூரத் தாகுமென்று ஹக்கன் னபியுல்லா அருளிசெய்தார்.

அல்ஹம்து சூரத்திறங்கும்போது அமரர் எழுபதி னுயிரமை
அல்லாஇறக்கினு னுகையாலே அல்ஹம்தெ னும்சூரு வையொரு
வன், நல்விதம்மோத இஞ்ஜீல் ஸபூர் நலமாந் தவ்றுத்து புறகா னின்
ஞன், கெல்லா மோதினேன் பலனுமென்று இறையோன் திருதூதர்
சொன்னுர்களே. (2)

அருளி ஞர்கஅபுல்அக்பார் ஆகா எஹூதிக்கும் நசாறுவுக்கும்
சருகா தவ்றுத்து இஞ்ஜீலிலே சங்கை அல்ஹம்து சூரத்தாகில்
ஒருவரும்யஹூதிநசாறு வாக உங்களி லாகமாட்டீர், மருங்காம்
ஸபூர் வேதத்திலே மதிப்பாய் அல்ஹம்து வென்னும் சூரு. (3)

அந்த மாயுண்டா யிருக்குமாகில் அக்கூட்டங்களே ஹக்தஆலா மந்தி யுங்கிஞ்ஜீர் முகங்களாக மாற்ற வேமாட்டா னென்றுரைத்தார் பந்த முடனிதை கேட்டநீனோர் பாங்காம் சூரத்து அல்ஹம்துவை சிந்தை மகிழ்ந்தோதி பலன்கள்பெற சிறந்தோன் தௌபீகைத் தருகஆமீன். (4)

ஹதீஸே குத்ஸியில் நபிதமக்கு ஹக்க னருளினு னென்ஹபீபே நிதியா முன்வேதங் களிலில்லாத நேர்மை அல்ஹம்து சூருக்கொண்டு பதியில் தமதும்மத் தோர்களேநான் பண்பா கசங்கை யாக்கிவைத் தேன், மதிப்பா யதையோது வோன்சரீர மாகிடும்ஹறும் நரகுக் கென்றுன். (5)

இன்னும் அல்ஹம்து சூரத்தோது மேற்ற யொவ்வொரு ஆயத்துக் கும், நன்றுப் பகரமாய் பூமியிலே நிறம்பி யேயுள்ள தங்கம்வாரி, அன்பா கஹக்கன் பாதையிலே அளித்தோன் சதகாவைப் போல என்றும், நன்று யிதையோது வோன்சரீரம் நரகுக் குஹறு மென் றுரைத்தார். (6)

அதிபன் நபிசொன்னுர் பிஸ்மிலுடன் அல்ஹம்துவென்னும் சூரத் திலே, பதினேந் துமீம்க ளிருக்கின்றது பண்பா யதையொரு யடிய னேத, அதிலுள் ளமீம்கள் பதினேந்துமே அன்பாய் பறவைகள் போல்பறந்து, மதிப்பா யறுஷிலே கொளுகிக்கொள்ளும் மலக்குகள் அறு ஷைசுமப்போர். (7)

அல்லாஇடத்திலே மனுவுசெய்வார் அதிபனேபார மிதுவே தென்க, சொல்கி றுன்அல்லா மலக்குகளே சூரத்அல்ஹம்தை என தடியான், நல்லாஓதிய தின்தவாபின் நலத்தகனமென்க கேட்ட மீம்கள், அல்ஹம்தோதிய அடியானுக்கு ஆண்டவாகூலி யாதுவென்க. (8)

அப்போது அல்லா மீம்களுக்கு அருளு வானீங்கள் அவனுடைய
தப்பாம் பாவத்தை எழுதப்பட்ட தருமாம் பட்டோலை யருகிற்
சென்று, ஒப்ப முடனவன் பாவங்களில் ஒவ்வோர் மீம்களும் பத்து
பத்தாய், மெப்பா யழியுங்க ளென்கமீம்கள் மேலோனேஇது
போதாதென்கும். (9)

அந்த மொழிகேட்ட மீம்களுக்கு அல்லா அருளுவான் ஓமீம்களே
விந்தை யாயவன் பாவங்களில் விரைவா யிருபதையழியு மென்பான்
பந்த முடன்கேட்ட மீம்களப்போ படைத்தோ னேயிது போதா
தென்று, பிந்தி பலதரங் கேட்கநூற்றி இருபதழியுங்காள் நீங்க
ளென்பான். (10)

அதுபோல் பதினைந்து மீமுங்கூடி ஆயிரத் தெண்ணூர் பாவங்களை
பதுமை யாகவே அழித்துவிடும் பக்ஷமுடனுெத்தன் நாளொன்றுக்கு
விதியா மைவேளைத் தொழுகையிலே விருப்ப மாஓத அல்ஹம்
துவை, சதிபாவமுப்ப தாயிரத்தி அறுநூரம்மீம்க ளழிக்குமென்றார்.

அல்ஹம் துவெனும் சூரத்தோதும் அன்பாம் பலன்களு ளைந்து
வேளை, அல்லா தொழுகையில் 'அல்ஹம்தோதும் அதின்வ ரிசைகள்
பற்றுதற்கு, எல்லா மாண்பெண்ணு மின்பமாக எற்றப் பதவிகள்
கொள்ளையாட, நல்லா தௌபீகைத் எந்தநாளும் நமக்கு நாயகன்
தருகஆமீன். (12)

தொழுகையில்

அல்ஹம்து சூரத்தோதும் பலீலத்து.

அல்லாதொழுகை மேலன்பில்லாமல் அதிலாகும்பல னறிந்திடாமல் பொல்லா புவியினையுகந்துசிலர் புகழுக்குடையோனை தொழுதிடார்கள், வல்லான் றொழுகையில் அல்ஹம்தோத வரிசைகிடைப்பதை குத்பாவிலே; அல்லாமா ஆலிம் அப்துல்ஹையிய் அவர்கள் அருள் சொல்ல உகந்துகேளீர். (1)

சுருக்க மஸனவீ இராகம்.

அல்ஹம் தென்னும் சூராத் தொழுகையிலே
அன்பா யோதபலனைக் கேளுமுவந்தே. (2)

அல்ஹம்து சூரத்திலே மொத்தஎழுத்து
அடவா யுண்டும்நூத்தி இருபத்நான்கு. (3)

அல்ஹம் தென்னும்சூராப் படிப்பதினால்
ஆகும் பலனைதொழுவோர் கேளும்செவியால். (4)

(அல்ஹம்து) இதில் அரபி எழுத்துகள்—ஐந்து.

அல்ஹம்து வென்பதற்கு அர்த்தங்கேளும்
எல்லாப் புகழும்புகழ்ச்சி என்பதாகும். (5)

இந்த அல்ஹம்திலே எழுத்துவைந்து
இவ்வைந்தில் ரகசியங்க ளுண்டுமைந்து. (6)

இவ்வைந் தெழுத்திஷாரு இயம்பக்கேளீர்
ஏற்ற ஐந்துவேளைத் தொழுகையறிவீர். (7)

எந்த முஸ்லிமாவது இரவும்பகலும்
என்றும் காயமாக ஐந்துவக்தும். (8)

தொழுதா லாம் நஜாஅத் தென்னும்விடுதி
துய்தாய் பொறுத்தமாகு மவனின்கெடுதி. (9)

(லில்லாஹி) இதில் அரபி எழுத்துகள்—மூன்று.

லில்லாஹி என்பதற்கு பொருளைகேளும்
அல்லா(ஹ்) ஒருவனுக்கே என்பதாகும். (10)

இந்த லில்லாஹியில் மூன்றெழுத்து
இதினோ டைந்தைசேர்க்க எட்டெழுத்து (11)

இந்த எழுத்துஎட்டும் படிப்பவர்க்கு
எட்டு சுவனவழியுங் கிடைக்குமவர்க்கு. (12)

(றப்பில்ஆலமீன்) இதில் அரபிஎழுத்துகள்—பத்து.

படைக்கோ லம்மனைத்தும் படைத்துவளர்ப்போன்
பாங்காய்ப் படைப்புக்கெல்லா மிரணமளிப்போன். (13)

எழுத்திவ் வாசகத்தில் பத்துமுண்டும்
எட்டும் சேர்க்கபதினெட் டெழுத்துமாகும். (14)

படித்தால் பதினெண்ணாயிரம் ஆலம்பலனை
பகிர்வான் ஹக்தஆலா கிருபையுடனே. (15)

(அற்ரஹ்மானி) இதில் அரபிஎழுத்துகள்—ஆறு.

நல்லோர் பொல்லோர்கள் யாவருக்கும்
நலத்த கிருபை செய்வோ னவனுமாகும்.)16)

ஆறு எழுத்திதில்முன் பதினெட்டையும்
அன்பாய் சேர்க்கஇருபத் நான்குமாகும். (17)

இரவு பகலில்சாஅத் திருபத்நான்கு
இருப்ப தாலிதைப்படிப் போர்களுக்கு. (18)

இருபத் நான்குசாஅத்து பாவமெல்லாம்
இறையோன் கிருபையால்பொறுப் பாகுமெல்லாம். (19)

(றஹீமி) இதில் அரபி எழுத்துகள்—ஆறு.

ரஹீமி யவனேபெரிய கிருபையாளன்
நிரம்ப இரக்கமுமிக் கதயாளன். (20)

கியாம நாளில்மூமின் கட்குமட்டும்
கிருபை சொந்தமாக செய்வோன் திட்டம். (21)

இதிலே எழுத்து ஆறு முண்டுங்கேளீர்
இருபத் நான்கைசேர்க்க முப்பதறிவீர். (22)

இதைபடித் தோரின்முப்பது நாளின்பாவம்
இறையோன் பொறுத்துகொள்வான் கேட்டுகொள்ளும். (23)

(மாலிகி யவ்மித்தீனி) இதில் அரபி எழுத்துகள்—பனிரண்டு.

கியாமத் தென்னுங்கூலி கொடுக்கும்நாளில்
கீர்த்தி எஜமானுன நீதியாளன். (24)

பன்னிரண் டெண்டெழுத்திதிலே யுண்டும்பாரீர்
பாங்காய் முப்பதையும் சேர்க்க கேளீர். (25)

நார்ப்பத் திரண்டெழுத்து மொத்தமாகும்
நலமா யிதின்ரகசியந் தெரிந்துகொள்ளும். (26)

நாற்பத் திரண்டுவயதை மதித்துகொள்ளும்
நல்இ ஷாறுக்கள்எ ழாருமாகும். (27)

இவ்வே ழாரில் செய்தப் பாவமெல்லாம்
இதனை யோதஅழிந்துப் போகுமெல்லாம். (28)

(இய்யாக னஅபுது) இதில் அரபி எழுத்துகள்—எட்டு.

அல்லா உன்னையே தான் நாங்களெல்லாம்
அல்லும் பகலும்வணங்கி வருவதெல்லாம். (29)

இதிலே எட்டெழுத்து உண்டுங்கேளீர்
இதோட நாற்பத்ரண்டை சேர்த்து பாரீர். (30)

மொத்த எழுத்துங்கூடி அன்பதாகும்
மூனும் மஹ்ஷரிநாள் நீட்டங்கேளும், (31)

வருட மன்பதாயிர மஹ்ஷருடநாள்
வருத்தந் துயரமுண்டும் பலதுமங்காள். (32)

அன்ப தெழுத்தைப்படித்து தொழுதவர்க்கு
ஆபியத்தைதருவான் ஹக்கனவர்க்கு. (33)

(வ இய்யாக நஸ்தான்) இதில் அரபி எழுத்துகள் பதினொன்று.

அல்லா(ஹ்) உன்னைக்கொண்டே கேட்பதெல்லாம்
ஆமாய் யெங்களுக்கு தேள்வை எல்லாம். (34)

இதிலே பதினொரெழுத்து உண்டும் பாரீர்
இதனோ டைன்பதையும் சேர்க்கக்கேளீர். (35)

ஆகு மொத்தமெழுத்து அறுபத்தொன்று
ஆலத்தி லுண்டுங்கடல்க ளறுபத்தொன்று. (36)

ஐந்து வக்த்துதொழுகையில் இருலாசுடனே
அறுபத் தோரெழுத்து மன்புடனே, (37)

படித்தோர்க் கறுபத்திலோர் கடலின் தண்ணீர்
பாங்காந் துளிஎண்ணிக்கைப் போலவே சீர். (38)

நன்மை யவனுக்குதான் மிகுதமாக
நாயன் கொடுத்திடுவான் சங்கையாக. (39)

(இஹ்தினஸ்ஸிருத) இதில் அரபி எழுத்துகள் பதினொன்று.

அல்லா(ஹ்) எங்களுக்கு வழிகளிலே
அன்பாய் காட்டிவைநீ நல்வழியே. (40)

இதிலே எழுத்துகள்பதி னொன்றுமாகும்
எண்கள் மொத்தமெழுபத் திரண்டுமாகும். (41)

இந்த எழுபத்ரண்டு எழுத்தைப் படித்தோர்
எற்ற மாம்வழியைக் காட்டப் பெறுவோர். (42)

எழுபத் திரண்டுகூட்டம் வழிகெட்டோரில்
எற்ற மஹ்ஷர்நாளி லாழ்வர்நரகில். (43)

அவர்களுடையகொடிய வழிதப்பியே
ஆவார் நேர்மைப்பற்றினோர்கள்வழியே. (44)

(ல்மூஸ்தகீம்) இதில் அரபி எழுத்துகள்—எட்டு.

அல்லா(ஹ்) எங்களைநே ரானவழியில்
அன்பாய் நடத்திவை சீரானநடையில். (45)

இதிலே எழுத்துஎட்டு உண்டுகேளும்
எழுபத் திரண்டும்சேர்க்க எண்பதாகும். (46)

ஒருவன் தொழுகையில்விதை யோதிதொழுதால்
உவன்செய் பாவத்துக்கு ஜாட்டையினால். (47)

துற்ரா எண்பதடிக்கும் பாவமிருந்தால்
துய்தா யகலுமிதனை யோதுவதினால். (48)

(ஸிருதல்லஜீன அன்அம்த அலைஹிம்) இதில் அரபி எழுத்துகள்—19.

எங்கள் றப்பேஎமக்கு காட்டுவழியே
இன்ஆ முனதைப்பெற்றோர் கூட்டவழியே. (49)

இதிலே உண்டுமெழுத்து பத்தொன்பதுவும்.
எண்பதுடனேதொண்ணூத் தொன்பதாகும். (50)

தொண்ணூத் தொன்பதெழுத்தைத் தொழுகையிலே
துய்தாய் ஓதிதொழுதால் கேளும்பலனே. (51)

ஹக்கன் பெயர்கள்தொண்ணூத் தொன்பதுடைய
*அஸ்மாஅ பறக்கத்தெல்லா மடைவாரவரே. (52)

(கைரில்மக்தூபி அலைஹிம்) இதில்அரபி எழுத்துகள்—பதினைந்து.

அல்லாஹு உனதுகோபங் கொண்டோர்வழியே
அரவே காட்டவேண்டா மெமக்கவ்வழியே. (53)

இதிலே பதினைந்தெழுத்து முண்டும்பாரீர்
இதோட தொண்ணூத்தொன்பதும் சேர்க்கேளீர். (54)

* அஸ்மா என்பது, திருநாமத்துடைய என்றறிக.

ஒருநூற் றிப்பதினன் கெழுத்துமாகும்
உகந்து தொழுகையிலிதை யோதக்கேளும். (55)

குறுஆன் சூரத்துகள் மொத்தமதுவும்
குறைவில் லாநூற்றிப்பதி னன்குமாகும். (56)

ஒருவன் தொழுகையிலே இதைப்படித்தால்
உண்மை புறுகான்சூரத் யாவுமுவப்பாய். (57)

ஓதி னதவாபின் கூலிகளை.
உடையோன் தருகுவானற் பதவிகளை. (58)

(வலத்தால்லீன்) இதில் அரபிஎழுத்துகள்—பத்து.

இலாஹீ வழிகேடானோர் பாதைகளை
எமக்கு காட்டவேண்டாம் துன்பங்களை. (59)

எழுத்து கள்இதில்பத் துண்டும்பாரீர்
இதோடு நூத்திபதினல் சேர்க்ககேளீர். (60)

எழுத்து மொத்தம்நூத்தி இருபத்நான்கு
இத்னைத் தொழுகையிலே ஓதினோர்க்கு. (61)

அன்பி யாக்களின்எண் ணிக்கைமொத்தம்
அருளு மொருறிவாயத் படிக்கிகேளும். (62)

ஒருநூத் திருபத்திநான் காயிரமும்
உண்டு மாகையாலிதை யொருவனுகந்தும். (63)

அல்ஹம்து தோதிநம மாகதொழுதால்
அன்பி யாக்கள்மொத்த பேர்கள்தம்மால். (64)

ஷபாஅத் துக்குப்பாத்திர மாகுமறிவீர்
சங்கை யறிந்துதீனோர் தொழுதுவருவீர். (65)

வேறு.

தொழுகும் போதுதுய்ய அல்ஹம்தை
பழுதில் லாமலோத கேளும்பலனை. (66)

அல்லா வுக்கும்அடியா னுக்குமிடையில்
சல்லாப வார்த்தைநடப்பை கேளும்அடியில். (67)

தோங்கல்.

*இப்ன ஸவ்ஜீஷரஅ குஷாபில் எழுதக் கண்டதை இயம்பக்கேளீர் இப்னு அப்பாஸ் றலியைத் தொட்டும் இதமாய் வந்தது எம்பிறசூல் மெப் பாகசொன்னர் ஜிப்ரீல்வந்து மேலோன் சலாமெனக் கெத்த வைத்து, ஒப்ப முடன்சொன்னன் நல்மாராயம் உகந்து கேள்மென உரைக்கலுற்ருர். (68)

மஸனவீ இராகம்.

அடியன்தொழுக நின்றுதக்பீர் சொன்னதும்
அவனுக்கெனக்கிடை திரையைஎடுப்பேன் கேட்டிடும். (69)

அல்ஹம்துஒத அவனிடம்நான் நெருங்கியும்
அடியனேநீ புகழ்ந்துதஅரீப் செய்வதும். (70)

எவருக்கென்க சொல்வான்லில்லா ஹியது
எற்றதஅரீப் புகழும்அல்லா வுக்கது. (71)

என்றடியன் சொல்லகேட்பேன் அவனேயே
இன்னன்அல்லா வென்றறிந்தையா வென்கவே. (72)

அடியனுரைப்பான் றப்பில்ஆல மீனவன்
ஆலத்தாரை வளர்த்துமின்னுங் காப்பவன். (73)

என்றடியன் சொல்கயில்நான் கேட்குவேன்
எவராகும்றப்பில் ஆன்மீன்சொல் லென்குவேன். (74)

---

* இப்ன ஸவ்ஜீ என்பது, இமாம் இப்னஸவ்ஜீ றஹ்மத்துல்லாஹி அலைஹி என்றறிக.

அப்போதடியான் அற்ரஹ்மான் உலகிலே
அவனெல்லோர்க்கும் றஹ்மத்செய்வோன் பாரிலே. (75)

நிற்ரஹீமி,மூமினோர்க்கு மட்டிலும்
நீதிநாளைக் கிருபைசெய்வோ னென்கவும். (76)

அப்போதுகேட்பேன் அடிமையே றஹ்மான்ரஹீம்
ஆராயிருக்கு மென்கசொல்வரன் பதிலையும். (77)

மாலிகியவ்மித் தீன்பயங்கர மாகிய
மஹ்ஷர்நாளின் நீதிஎஜமா னென்கவே. (78)

அதைகேட்டதும்நான் அடியன்மேல்சந் தோஷமாய்
அந்நாளைஎஜமான் ஆகும்நான்தா னுகையால். (79)

அடியனே என்வஸ்பை இகுலாசோடுநீ
அன்பாய் பயான்செய்தாய் நாடல்கேளுநீ. (80)

இதைக்கேட்ட அடிமை அஹ்க்கமுல்யா ஹாக்கிமீன்
இய்யாகநஅபுது வஇய்யாக நஸ்தஈன். (81)

யஅனேஉன்னை வணங்குறேன்உன் னிடத்திலே
எனக்குதவி தேடுகின்றேன் என்கவே. (82)

இதற்குபதில் ஹக்கனுடைய புறத்திலே
இருந்துஉத்திர வாகுமெனது அடிமையே. (83)

எனக்கேவணக்கஞ் செய்துமுனக்கு தேள்வையே
என்னிலெல்லாத் தேடுவோனு மாகவே. (84)

இருக்கிலிப்போ உனக்குதவி தேள்வையே
எதையுமுன்மன தாரகேள்நீ என்கவே. (85)

அப்போதுஅடியன் எதையுமுவந்து கேட்டிடில்
அதைகொடுக்கப் படுமேஹக்கன் புறத்தினில். (86)

அப்போதுஇஹ்தி னஸ்ஸிருதல் முஸ்தகீம்
அந்தநேர்வழி தேடுரேன்நா னென்கவும். (87)

அப்போதுகேட்பேன் எவர்கள்நேர்வழி நாடுருய்
அடியனேசொல் லென்கசொல்வான் பிரியமாய். (88)

ஸிருதல்லஜீன அந்தநேர்சில பேர்களில்
அன்அம்த உந்தன்இன்ஆ மானதில். (89)

அலைஹிம்அவர்கள் பேரில்நீதரும் போலவே
அடிமைஎனக்கு நல்நஸீபாக் கென்கவே. (90)

என்னுடைய இவ்வடியான் றன்னைநான்
எனதுஇன்ஆம் பெற்றஜனங்க ளோடுதான். (91)

தாகில்செய்தே னென்று ஹக்கன் சொன்னதும்
தாழ்மையாக அடியன்கேட்பான் மீளவும். (92)

கைரில்மக்தூ பிஅலைஹிம் அத்துடன்
வலத்தால்லீன் யஅனே அந்த ஜனங்களின். (92)

பேரினது கோபமானது இரங்கியே
பெரும்நெருப்பு மூண்டதுபோல் பொங்கியே. (94)

எழும்பினதோ அந்தக்கொடியோர் கள்வழி
எனக்குவேண்டாம் கொடுத்திடுநே ராம்வழி. (95)

என்றுசொல்ல ஹக்கன்மிகசந் தோஷமாய்
எல்லாமலக்கு களுக்கும்சொல்வான் திட்டாய். (96)

நீங்கள்சாட்சி யாயிருங்கள் நானுமே
நேர்மைஇன்ஆ மெனதைப்பெற்றோ ருடனுமே. (97)

அடியனிவனை சேர்த்துவிட்டே னென்கவும்
அப்போதுஆமீன்என் றடியான் சொல்லவும். (98)

இந்தஆமீன் என்னும்வார்த்தை யானதே
இயம்பவானோர் கேட்டுபூரிப் பாகவே. (99)

எல்லோரும்ஆமீ னென்றுஉறத்த சப்தமாய்
இன்பாககேட்பா ரெனவந்தது திட்டமாய். (100)

தன்பீஃ.

தோங்கல்.

இந்தபாத்திஹா சூரத்திலே இத்தகையான பெருந்தரஜா
விந்தையாகவே இருப்பதில்தான் வீணன்இபுலீசு லகுனத்துல்லா
சிந்தைநொந்தவன் அழுததாக சிறப்புமிகப்பெற்ற நபியுல்லாதாம்
அந்தமாயருள் இருஹதீஸை அருளஅடியிலே அறிந்துணர்வீர். (1)

ஐந்துவேளையில் லகுனத்துல்லா அதிகமழுதின்னும் சலிப்பானதில்
பந்தமுடனபீ பிறந்தநாளும் பாத்திஹாசூரத் திறங்கும்போதும்
நிந்தனைமல்வூ ஞனபோதும் நிலத்திலவன்றனை எறிந்தபோதும்
அந்தமாய்மனு ஸூஜூதிடும்போ தழுதுசலிப்பதாயருளிச்செய்தார்.

மூன்றுசெய்கையை ஆதமக்கள் உகந்துசெயலஈன் அழுதோடுவான்
உளன்றலாய்தொழ பாங்கிகாமத் தோதும்வேளையு முன்னெதிர்த்த
தோன்றும்பாவமாங் கருமங்கண்டு தய்யலாஹவ்லா சொல்வேளை
யும், ஆன்ற ஆயத்துல் குர்ஸீபோத அயர்ந்தே ஓடுவான் ஷைத்தா
னென்றூர். (3)

வழுவிலாஷைகு தமர்கந்தீ வண்மையுடன்கூறும் ருவிகேளீர்
தொழுக* ஹூக்மெஇ லாஹியாக தோஷீஇப்லீசு ஆஹ்றஎன்று
அழுதுஏங்கும்போ தவன்கூட்டங்கள் ஹாலராய்கேட்க அழுது
ரைப்பான், தொழுக ஆயத்து இறங்கிட்டது தய்தாயும்மத்தோ
ரிலங்கலாச்சு, பழுதில்லாதவ ராகலாச்சு பாவியென்செய்வே னென
வழுதான். (4)

அப்போகூட்டத்தார் எஜமானேயா மதற்குசெய்வது யாதுவென்க
ஒப்பமுடனவாள் தொழுகப்போகா தும்மாலாமட்டுந் தடுத்துக்கொள்
ளும், தப்பிப்போவோரை யவ்வல்வத்து தவறும்படியேனும் செய்து
கொள்ளும், மெய்பாயிதுவுமே ஏலாவிட்டால் மேன்மைக்களா கேண்
மினென்றான். (5)

* தொழுகஹூக்மெ இலாஹி என்பது, தொழுகைக்கு ஆண்டவன் உத்
திரவாக வென்றறிக.

ஆதம்மகனுமே தொழுகநின்றுலவனை நான்குபேர் சூழ்ந்துக்கொண்டு நீதமுடன்மேலுங் கீழும்பின்னும் நேர்மைவலமிடங் திரும்பசெய்யும், வீதமுடனிதற் கமையாவிடில் விருப்பங்தொழுகைமே வில்லா வண்ணம், போதமுடன்செய்யுஞ் செய்யுமென்றே புந்தித்தமோரி நொந்துசொன்னன். (6)

இந்ததன்பீஹில் சுருக்கமாக இப்லீஸ்துயரத்தை எடுத்துக்காட்டல் பிந்தியஸமா னுஇதிலே பேசமாஜிகள் மிகுதமானோர், அந்தமா ஈமான்தன்னை காத்து ஐந்துநேரமுங் தொழுதிடாமல், பந்தமுடன் பதி சொர்க்கவாசைப் பாங்காய்வைத்துள்ளோர் பகரக்கேளீர். (7)

இசுலாமில்பர லேந்துமுண்டும் இதிலேஎழுத்தைந்து முண்டவைகள் விசுவாசமாக கூடுமாகில் விருப்பஇசுலாம் பேர்நிறப்பாகும், அசுமா இசுலாமின் ஹறுபொன்றது அகலஅதின்பெயர் மாற்றம்போல, நசுக்கிநலிவாகு மவர்கள்ஹக்கில் நலத்தஇசுலாமின் நாமந்தானே.

இசுலாம் எழுத்துக்கு அப்ஜதிஎண் ஏற்றஅலிபுக்கு ஒன்றதாகும்
பிசகாஸீனுக்கு அறுபதாகும் பின்புலாமுக்கு முப்பதாகும்
நிசமாம் அலிபுக்கு ஒன்றதாகும் நேர்மைமீமுக்கு நாற்பதாகும்
கசமாமனதன்றி ஐந்தெழுத்தின் கடமையடியிலே கழறக்கேளீர்.

கலிமாசொல்வது ஹயாத்திலொன்று கடமையாம் நோன்பில் அறுபதாகும், சலியாத்தொழுகையில் மூன்றுபத்து சக்தியுடையார்மேல் ஹஜ்ஜுஒன்று, வலியார் ஸக்காத்துநான்கு பத்தில் வகையாய்ந் தொருபாகமீவதாகும், மெலியாதிவ்வைந்தும் உற்றுணர்ந்து மிகைப்பாய் நிறைவேற்றல் கடமைதானே. (க0)

இத்தகையான வகையறிந்து இறையோன் விதிப்பயன் றனை யுணர்நது, சித்தமாகவே இருத்தாட்டியே சீர்பெற்றநல்லோர் மஜ்லீசிலே, எத்தாய்சேர்த்திடா வயதைவீணில் இதமாய்போக்கச்செய் கல்புடைய, சுத்தமது * பஸாத் செய்திசில சுருக்கமாய்சொல்லக் கேட்பீர்களே. (11)

---

* பஸாத் என்பது, கெடும்பு அல்லது கலப்பு என்றறிக,

அருளினர்ஹஸன் பஸரிஇமாம் ஆறுசெயலாக்கும் கல்பைபஸாத், சருகாத்தௌபாவி ஞதரவால் சார்ந்தேபாவத்தைச் செய்கிறதும் அருமைஇல்மோதி அமல்செய்யாதும் அமல்கள்இகுலாசில் லாசெய்வதும், மருங்காம்ஷுக்ரில்லா உணவுண்பதும் மன்ஞேன்கிஸ்மத்தில் பொருந்தாததும், மரித்தோரைதபன் செய்வார்செய்தும் மனதில் மதிக்காதிச் செயலாமென்ருர். (8)

வஹபுறலியிட மொருவர் கேட்டார் வரிசைதைய்யிபு கலிமாஒத்தன் உகப்புடன்சொன்ஞல் சொர்க்கசாவி உவன்பெருவாஞ வென்கபதில் அகத்தியமவன் பெறுவதுண்மை ஆகிலும்பல்லின் சாவி வேண்டும் தகமைஅமலிஞற் சாவியிற்பல் தானேறப்படுமல்லா வில்லேஎன்ருர். ()

இந்தக்காலத்தில் சிற்சிலபே ரேற்றக்கலிமாவை யோதிவிட்டால் எந்தவிதத்திலும் சுவனலோகை இறைபோன்றருவது உண்மைஎன்றும், அந்தமுடன்தொழார் அமலுஞ்செய்யார் அவர்கள்பல்லில்லா சாவிபெற்றுப், பந்தமுடன்பதி திறந்துவாசம் பண்பாகசெய்ய மாட்டார்களே. (10)

நன்றுநபிசொன்ஞ ருங்களுக்கு நானேர்நல்வஸ்த்தைக் காட்டொண்ஞதா, அன்பாமவ்வஸ்த்தால் உம்அமல்கள் அதிகநலமாய்தாம்பெற வொண்ஞதா, பொன்வெள்ளிகைரூத் காணநலம் புகழானஜிஹாத் காணவுமேல், நன்றுவேண்டாமா எனயாதென்க நாயனைதிக்கிர் செய்வதென்ருர். (11)

கண்ணிராகம்.

முன்வெளி யானஅஹ்றஸ ஞன்னஜாத் நூலதிலே
இன்பான திக்கிர்செய்தி இயம்பி இருப்பதாய்ந்தே. (12)

அன்பான லாயிலாஹ இல்லல்லா(ஹ்) வெனும்திக்ரால்
தென்பாம் பலனைப்பற்றத் தேட்டமுள்ளார் கேட்டுணர்வீர். (13)

வரிசை ஈமானில்லான் வலுப்பஅமல் செய்தாலும்
பரிவா யதின்கூலி பாங்கா யவன்பெறுகான். (14)

தொழுகை யில்லானுக்குத் துய்யஈமா னில்லையென்று
அழுத்தம் மாகவேஹதீஸ் அஹ்மது நபியுரைத்தார். (15)

ஈமானுக் கடையாள மிறையோன் றொழுகைஎன்று
ஆமாக நபியுரைத்தார் அடியர்கள் யாவருக்கும். (16)

எல்லா அமல்களிலு மேற்ற அமல் தொழுகையென்று
நல்லார் நபியுரைத்தார் நல்தீனோர் யாவருக்கும். (17)

இந்தத் தொழுகைப்பற்றி ஈமானைக் காப்பவர்கள்
சிந்தை மகிழ்ந்திடவாய் சிறப்பாய் தொழுதுக்கொள்வீர். (18)

ஈமான் றனக்குணவு இறையோன் தொழுகையேதான்
ஆமாகு முடலுக்கு அன்னபலம் போலாகும். (19)

தொழுகையால் ஈமானுந் தளதளப் பாயிலங்கும்
பழுதில்லா துண்டோர்முகம் பளபளப்பா இலங்கிடும்போல். (20)

ஒருபகலுணவில்லா துற்றநோன்பைப் பற்றமுகம்
கருகிடும்போல் தொழுகார் கனஈமான் சோம்பிடுமே. (21)

காய்க்கரி வாங்கநோட்டம் கருதிச்செய்யும் போல்தொழுகை
வாய்க்கும் பரிசுணர்ந்து வணங்கிடில் நல்லபலன். (22)

தொழுகைப் பரனுவாஜிப் சுன்னத்துப் பலவகையை
பழுதில்லா மற்றொழுகப் பாவ மகல்வதைக்கேள். (23)

தோங்கல்.

மன்னர்நபியிடம் அஸ்ஹாபுகள் மருங்காய்கேட்டனர் யாரசூலே
அன்பாய் அடியர்செய் அமல்களிலே அல்லாஇடத்திலே ஏற்றமான
நன்றுஅமலது யாதுவென்க நலமாயடியர்முன் னெதிற்கப்பட்ட
துன்பப்பவச்செய லகற்றுவது துய்யோனிடமேற்ற அமலதென்றார்.

முன்னோன் பாதையில் படைக்களம்போம் முஹாஜரீனொத்தர் மனை
யாட்டிநல், அன்பினழகுளார் போர்வையுடன் அதபாய்கடைபஜார்

வந்துகஜூர், இன்பாய்விர்க்குமோர் அன்சாரியின் ஏற்றக்கடையில்
போய் கஜூர்கேட்க, நன்றுபுதுகஜூர் உண்டுமுள்ளே நலமாய் பாரு
மென் றழைக்கக் கேளீர். (25)

உள்ளேயம்மாது சென்றவுடன் உகப்பாய் மோகமாய் அன்சாரவர்,
மெள்ளே முகப்போர்வை நீக்கிமாதின் முகத்திலேயவர் முத்தந்
தந்து, விள்ளுமம்மாதின் முகத்தைப்பார்த்து வேந்தனும்அல்
லா(ஹ்)தனை பயந்து, உள்ளாலுருகியே கலக்கத்துடன் |உடையோ
னபிதங்களருகில்வந்தே. (26)

இன்னவிதத்தவர் செய்துவிட்டேன் இதற்குஎனக்கேற்ற தண்டனை
கள், நன்றுஎதுவுண்டோ செய்துமென்னை நபியேஎன்குறை யகலு
மாப்போல், அன்பாய்செய்மென இரண்டுதரம் அழுதுகேட்கையில்
அன்சாரிக்கி, ஒன்றும்பதிலீயா நபியிருக்க ஓதினார்பிலால் தொழ
காமத்தை. (27)

தொழுதுமுடிந்தபின் நபியிடத்தில் துன்பமிகவுள்ள அன்சாரவர்
அழுதுகேட்டன ரெனதுகுற்ற மகலவழிசொல்லும் நபியேஎன்க
தொழுகை உலுவுட னிந்தநேரந் தொழுதீராவென்று நபிகேட்கை
யில், தொழுதே னெனசொல்ல உனதுபாவம் துலைந்ததெனநபி
சொன்னார்களே. (28)

துக்கந் துயரமாய்நபி இடத்தில் துன்பமாய்வந்து அழுதஅன்சார்
மிக்கபயமானபாவமது மேலோன்றொழுகையைத் தொழுததாலே
தக்கமன்னிப்பாய் தொலைந்ததென்று தாஹாநபியுரைக் கேட்டுந்தொ
ழார், ஹக்கன் றொழுகையே காயமாக அடவாய்தொழ இன்னும் பல
னைக்கேளீர். (29)

கவனிப்பு.

இதனடியிற் கூறும் அரபி வாக்கியங்கள் பொதிந்த (1 முதல் 16) வரையில் லக்கமிட்டுள்ள ஹதீதுகளில் சருகுதல் கண்டவர்கள் இந்நூலின் முகப்பில் வைத்துள்ள அரபி எழுத்தின் வாசகங்களைக் கூர்மையாகப் பார்த்து திருத்திக்கொண்டும் அரபி எழுத்துகளின் சொற்களின் சப்தங்கள் சோரமில்லாமலும் படிக்க மிக்க ஆவலுடன் விரும்புகின்றனம்.

ஹதீஸ்.

(1) இன்னஹு இதாகாமற் ரஜுலு இலஸ்ஸலாத்தி பகால அல்லாஹு அக்பர் கரஜ மின்துனூபிஹி கயவ்மின் வலதத்ஹு உம்முஹு.

கும்மி இராகம்.

இன்னஹு இதாகாமற்ரஜு லுஹதீஸ்
எங்தொத்தன் தொழுகின்று தக்பீர்சொல்ல
வின்னப் பாவம்விட்டு வெளியாகிறு னன்றை
வெளிபட்டப் பாலன்போ லென்றார்களே. (30)

(2) வஇதாகால ஸுப்ஹானக அல்லாஹும்ம வபிஹம்திக கதபல்லாஹு தஆலா லஹு பிகுல்லி ஷஅரத்தின் அலா பதனிஹி இபாதத ஸப்ஈன ஸனதின்.

இன்னும் தனூஒத இவன்மேனி ரோமங்கள்
எல்லா மிபாதத்து எழுபதாண்டு
நன்றாக செய்பலன் நாயன்வரைவதாய்
நாயகர் நபியுல்லா நவின்றார்களே. (31)

(3) வஇதா கறஅ பாத்திஹத்தல்கிதாபி பகஅன்னமா ஹஜ்ஜ வஇஃதமர.

இன்னும் கிறுஅத்து அல்ஹம்து சூரத்தை
இன்புற்று ஓதலின் பகரத்துக்கு
இன்பாகவே ஹஜ்ஜு உம்ரஃவின் பலனென்று
எம்மிற சூல்நபீ சொன்னார்களே. (32)

(4) வஇதா றகஅ பகஅன்னமா தஸத்தக பிவஸனிஹி தஹபன்.

இன்னுமே றுகூஉ செய்திடி லப்போதே
இவனிடைக் குசரி,யாகதங்கம்

நன்று சதகாவை செய்பல னுமென்று
நாயகர் நபியுல்லா சொன்னார்களே. (33)

(5) வஇதாகால ஸுப்ஹான றப்பியல்அலீமி பகஅன்னமா கறஅ குல்ல
கிதாபின் உன்ஸில மினஸ்ஸமாஇ.

இன்னும்றுகூஇலே தஸ்பீஃ அலீமோத
இறங்கிய வானத்தின் வேதமெல்லாம்
அன்பாய் படித்ததைப் போலாகு மென்றிதை
அஹ்மது நபியுல்லா சொன்னார்களே. (34)

(6) வஇதாகால ஸமிஅல்லாஹு லிமன்ஹமிதஹு நஜரல்லாஹு
தஆலா இலைஹி பிரஹ்மதிஹி.

இன்னும் ஸமிஅல்லா(ஹ்) சொல்லி கௌமாவர
இவனுடைய பேரிலே ஹக்தஆலா
நன்று றஹ்மத்தின் பார்வையாகுமென்றே
நம்நபீ நாயகர் சொன்னார்களே. (35)

(7) வஇதா ஸஜத பகஅன்னமா அஃதக பிஅததி குல்லி சூரத்தின்
மினல்குறுஆனி றகபதன்.

இன்னும் சஜ்தஃவைச் செய்திடில் புறுகானின்
எண்ணிக்கைப் போலொவ்வோர் சூறுவுக்கும்
நன்றொவ்வோர் அடிமையை உருமை விட்டப்பலன்
ஆகுமென நபீ சொன்னார்களே. (36)

(8) வயிதாகால ஸுப்ஹான றப்பியல்அஅலா கதபல்லாஹு தஆலா
லஹு பிஅததி குல்லி சூரத்தின் ஹஸனுதின்...............

இன்னும் சஜ்தஃவில் தஸ்பீஹ அஅலாஓத
எல்லா சூறுக்களின் எண்படிக்கு
நன்றுகளை...........நாயன் எழுதுவா னென்றிதை
நாயன்றிருத்தூதர் சொன்னார்களே. (37)

(9)வஇதாதஷஹ்ஹத அஅதாஹுல்லாஹுதஆலா தவாபஸ் ஸாபிரீன்.

இன்னும்கஅதாவி லேதஷஹ் ஹுத்ஒத
இவனுக்குக் கொடுக்குவான் ஹக்தஆலா
நன்றுசபர்செய்த சாபிரீன் பலனென்று
நாயகர் அஹ்மதர் சொன்னார்களே. (38)

(10) வஇதா ஸல்லம மின்ஸலாத்திஹி பதஹல்லாஹுதஆலா லஹு பிதமானியத்த அப்வாபில்ஜன்னதி பயத்குலுமின் ஐய்யிபாபின்ஷாஅ.

தொழுகை முடிக்கவே துய்ய சலாம்சொல்ல
துய்தான சொர்க்கத்தின் வாயலெட்டும்
பழுதில்லாப் புகுந்தவன் நாடிய வாயலைப்
படைத்தோனீவானென்று சொன்னார்களே. (39)

(11) வகாலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். இன்னல்லாஹ பரலஸ்ஸலாத்தல் கம்ஸ அலாகுல்லி முஸ்லிமின் வமுஸ்லிமதின் வஅலாகுல்லி ஹுற்ரின் வஅப்தின்.

தொழுகையை ஐவேளை விதியாக்கினான்அல்லா
துய்ய முஸ்லிமானு பெண்பேரிலே
பழுதில்லா அப்தேனும் நாட்டானும் சரிஎன்றே
பகர்ந்தாரே நபியுல்லா தீனோர்களே. (40)

இன்னுமிபுலீசு சந்தோஷிக்கத் தொழார்
இதமாக யோசித்து தொழுவாரென்று
நன்றைந்துவேளையுந் தொழுகார் நஷ்டங்கூறும்
நாயகர்நபிஹதீஸ் கேட்பீர்களே.

(12) வகாலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம், மன்தரகஸ்ஸலாத்தல்பஜ்ரி தபற்ரஅ மின்ஹுல்ஈமானு.

மன்தர கஸ்ஸலாத் தல்பஜ்ரி எனும்ஹதீஸ்
மனிதனைத்தன்பஜர் தரக்குசெய்தோன்
நன்றீமானைவிட்டுந் தூராகிட் டானென்று
நாயகர் நபியுல்லா சொன்னார்களே. (41)

(13) வமன் தரகஸ்ஸலாத்தல் லுஹர தபர்ரஅ மின்ஹூல் அன்பியாஉ

இன்னும்லுஹருத் தொழுகையை யொருவனும்
இயல்பாகத் தொழுதிடா தரக்குச் செய்தோன்
அன்பியாக் களைவிட்டுந் தூராகிட் டானென்று
ஹக்கன் திருத்தூதர் சொன்னார்களே. (42)

(14) வமன் தரகஸ்ஸலாத்தல் அஸர தபர்ரஅ மின்ஹூல்
மலாயிகத்துல் முகர்ரபூன்.

வமன்தர கஸ்ஸலாத் தல்அஸர ஹதீஸ்
வகுத்தாம் அஸரொத்தன் தரக்குச் செய்தோன்
அமரர்கள்முகர்ரபை தூராக்கிட் டானென்று
அஹ்மது நபியுல்லா சொன்னார்களே. (43)

(15) வமன் தரகஸ்ஸலாத்தல் மகரிப தபர்ரஅ மின்ஹூல் குறுஆன்.

இன்னும் மக்ரிபுத் தொழுகையை யொருவனும்
இன்பாகத் தொழுகாமல் தரக்குச் செய்தோன்
புன்மை தூராகிட்டான் புறுகானைவிட்டென்று
புகழான நபியுல்லா சொன்னார்களே. (44)

(16) வமன் தரகஸ்ஸலாத்தல் இஷாஅ தபர்ரஅ மின்ஹூர் ரஹ்மான்.

இன்னுமிஷாவின் தொழுகையை யொருவனும்
இதமாய் தொழுகாமல் தரக்குச் செய்தோன்
நன்று றஹ்மானை தூராக்கிட் டானென்று
நாயகர் துக்கித்துச் சொன்னார்களே. (45)

வேறு தோங்கல்.

நன்நீமானுடன் நபிமார்களும் நலத்தமுகர்ரப்கள் புறுகானதும் என்றுமுளநாயன் றஹ்மத்ததும் எற்றத்தொழுக்கைவிட் டோனை விட்டு, வென்றி தூரமா யகலும்ஹதீஸ் விளம்பலைக்கேட்டுந் தொழுகைவிட்டக், கன்னெஞ்சார்களீ டேற்றப்பெறக் கருதி யடியிலேகழ ீக்கேளீர். (46)

இத்தனைத்தா மதமேதையா. (என்னும் பதம் மெட்டு.)

பல்லவி.

எப்படிஈ டேற்றமாகுமே-இசுலாத்தி னோர்கள்
தப்பவழிதே டல்நன்றாகுமே.

அநுபல்லவி.

எப்படியாம் செப்புவது-மெப்புடன்தொழு காரையடைத்து
தப்பைத்திருத்த இப்பஇசுலாம்-தவ்லத்தகன்று விட்டதினால். எப்.

சரணங்கள்.

உடலுமுயிரும் இல்மும் பொருளேயே-கொடுத்த வல்லான்
நடக்குமந்த மஹ்ஷர் நாளேயே
அடருமதற்கு செய்தஷுக்ரையே-அடியே நீ
நடப்பை சொல்வா என்றுகேட்கவே

அடியன்பதிலீ யாதவரையில்-வடிவாயவன்கால் முந்தாதென்று
நெடியோன்தூதர் சொல்லையொப்பா-தடித்தனம்செய் பாதகர்க்கு.எ.

ஏகனருள் திருமறையிலே-எந்தநாளும்
மோகமுடனேந்துவேளேயே
சாகளவும் இடைவிடாமலே-சார்ந்துநிலைப்பா
டாகஎல்லாந் தொழுதுவருகவே

பாகம்முப்பத் தாறுபத்தில்-ஏகனையத் திறக்கிவைத்த
ஆகமங்கள் பார்த்துங் கேட்டும்-தேகவணக்கம் விட்டபேர்க்கு. எப்.

கத்தன்வணக்க மானதொழுகையே-கருணை இசுலாம்
உத்தமர்கள் பற்ற லுண்மையே
சுத்தமில்லார் தொழுகைத் தன்மையே-சுகமுணரா
நித்தனைஐ வேளைத் தொழுகாரே

ஒக்தைநேரத் தொழுகைவிட்டால்-மெத்தநரகில் மூன்று * உக்பா
பித்தராள்வா ரென்றுநபி-சித்தமாசொல் லாவிட்டோர்க்கு. எப்.

தொழுகைதீனின் தூணதாமென்றும்-தொழுதிடாதான்
இழு வாயிடித்தான் தீனதைஎன்றும்
நழுவிடாசெய் மொத்த அமலிலும்-தொழுகையேதான்
அழுத்தமாம்கை ரானஅமலென்றும்

---

* உக்பாஎன்பது, உக்பாஒன்றுக்கு எண்பதாயிரம் வருடமென்றறிக.

தொழுகையில்லா னுக்குரமான்-அழுத்தமாக இல்லையென்று
வழுவில்லாமல் நபியுல்லாசொல்-பழுதுசெய்யும் பாதகர்க்கு. எப்.

* முகப்பனேநிக் காஹும்கத்னவும்-முஹம்மதியர்
உகந்துசெய்யல் சுன்னத் தாமென்றும்
உகப்புடனே தொழுகை பரலாயும்-உள்ளதுவை
பகமையாக்கி இருத்திடாமலும்
தகைமைஇசுலா மென்றுவேஷம்-உகமையாகப் போட்டுக்கொண்டு
ஜெகத்திலிசுலா மென்றுலாவல் இகழ்ச்சிஎன்றே எண்ணிடார்க்கு. எப்

வயதுமேழு பிள்ளைக்காகினல்-வணங்க பெற்றோர்
நயந்து † தாக்கீத் செய்திடும் சொல்லால்
வயதுபத்துக் கெத்தியும்விட்டால்-வளமை படுத்த
பயமுறுத்தி அடித்துசிமுரினல்
அயர்ந்திடாமல் பெற்றவர்கள்-பயந்துபாலர் தொழுதுவருக
முயற்சைசெய்ய வேண்டுமென்ற முஹம்மதியா லாவிட்டார்க்கு. எ.

பாரியாள்தொ ழுகவேண்டியும்-பண் பாகபத்தா
நாரிக்கிநய மாகசொல்லியும்
மீறினல்ப யத்தைவறுத்தியும்-மீண்டிடாதக்
காரிகையை யடித்துத் தொழுகவும்
சீரிசெப்பி யுந்தொழுகா-தூரிக்கிக்கொ டுக்கதல்லாக்
§ வாரியொத்த மார்க்கமுணரா-நாரியோ டுகந்தபேர்க்கு. எப்.

அங்கமாக ஐந்துவேளையும்-ஜமாஅத்தோடு
சங்கையாகப் பலருங்கூடியும்
தங்கள்மேல்விதி யானகடமையும்-தவிர்ந்திடாமல்
பங்கமணுகாப் பாதுகார்க்கவும்
பாங்குசப்தங் கேட்டுபள்ளி-ஓங்கிசென்று தொழுபவரை
ஆங்காங்குகண்டு மசட்டைசெய்து-பாங்குடன்தொழுகாதவர்க்கு.எ.

ஒருநோமுன்தக் பீர்தஹ்ரீமும்-ஒழுங்குதவற
அருமைசித்தீக் அக்ப-ரவர்களும்

---

* முகப்பனேஎன்பது, முகச்சவரமுதலிய சுன்னத்தான கருமமென்றறிக.
† தாக்கீத் என்பது, திட்டம்செய்வ தென்றறிக.
§ வாரியொத்தவென்பது, சமுத்திரத்தை யொத்த தென்றறிக.

இருகண்ணீர்விட் டழுதுஏங்கவும்-கேட்க என்செய்
மருமைப்பயண வேளைப் பலபேரும்
தருமசபரு செய்யசொன்ன-கருமம்போலிங் நேரத் தஹ்ரீம்
சருகலாற்ற எவருமில்லைஎன்-றுருகியழுத லுணர்ந்திடார்க்கு. எப்.

உலகில்வாழும் போதுசந்தோஷம்-உடையோனைத் தொழுக
நலத்தமவுத்தில் மிகுத்தவானந்தம்
* பிலத்திலொடுங்க யிற்பேரானந்தம்-பின்புஹஷரில்
கலக்கமில்லாக் காட்டும்சந்தோஷம்
தலம்பலதி லேசலாமத்-நலத்தநாய னின்ரஹ்மத்
§குலத்தவர்களோடுஜன்னத்-குலவியிருக்கத்தொழுதிடார்க்கு. எப்.

அல்பகலும் ஹக்கன் எவலை-ஆய்ந்து மனதில்
நல்நபியின் சொல் செயல்களை
எல்லையுட னெடுத்தப் பேர்களை-இடும்புப் பேசி
தொல்லையுலகில் சிக்குண்டோர்களை
பொல்லாநரகம் விட்டகல-நல்அமலைச்செய்துவர
அல்லாதவ்பீக்தருக அஹ்ஸன்-சொல்பத முணர்ந்திடார்க்கு. எப்.

தோங்கல்.

காலமாமிந்தப் பிற்காலத்தில் கருணைநபியுல்லா உம்மத்தோரில் வாலவயதினை நம்புவோர்கள் வல்லோன்னபீஎவ லறிந்துணர்ந்து நீலனிபுலீசுக் கிணங்கிடாமல் நித்தம் ஐவேளைத் தொழுதுக்கொண்டு, சீலமுடன் ஈமான் தவ்லத்தோடுசெல்வோர் ஜெயம்பெற்றோரவர்க்ள் தாமே. (58)

சுருக்கமாய்கூறு மிந்நவீஹத் சூட்சமறிந்தோர்க்கு போதும்போதும், பெருத்தஉபதேச மெதைக்கூறினும் பேதையர்செவிக் கேறுதென்று, நிருத்தினேனிந்த முதற்பாகத்தை நேர்மையுளமரு பாகத்திலே, திருநபியுகப் புடனேதீனோர் திவ்யமதிப்பைக்கூர்ந் துணர ஆமீன். (59)

ஹக் சுபுஹானுஹு வதஆலாவின் கிருபையால் இந்த
தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து
முதற்பாகம்
நல்அமல் விளக்கம், நயவழி துலக்கம். முற்றுப்பெற்றது.

---

* பிலத்தி லொடுங்கயில் என்பது, கபுராயிற்புகுதயி லென்றறிக.

§குலத்தவர்க ளோடுஜன்னத் தென்பது, ஜன்னத்துடைய அஹ்லுகளோடென்றறிக.